உ

சிவமயம்.

ஸ்ரீபரமேசுவரர் பார்வதிதேவியாருக்குத்

திருவாய் மலர்ந்தருளிய

கெவுளி சாஸ்திரம்

மூலமும் உரையும்.

இஃது

ஈரோட்டில் வசிக்கும்

வேலப்பாடி மகா ள-ள-ஸ்ரீ இரத்தினசபாபதி

முதலியாரவர்கள் குமாரர் கண்டிராக்டர்

வே. இராமலிங்கமுதலியாரால்

பற்பல ஏட்டுப்பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து

அநுபவமான வசனகாவியத்திற்குச்சில நூதனபா

டல்கள் இயற்றிக்கோர்வை நூலாகச் சேர்த்துச்சக்

கரங்கள் அமைத்துப் பொருளுரைசெய்யப்பட்டு,

M. R. C. காவேரிஸ்டேஷன் மாஸ்டர் ம-ள-ள-ஸ்ரீ

E. M. சென்னகேசவலு நாயிடு

அவர்கள் வேண்டுகோளின்படி

மகா ள-ள-ஸ்ரீ

R. சண்முக முதலியார் அவர்களது

ஈரோடு:

சகலகலாநிலைய அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

[முதற்பதிப்பு காபி 1000]

1893

(COPY-RIGHT REGISTERED)

Digitized By Roja Muthiah Research Library

உ

சிவமயம்.

ஸ்ரீபரமேசுவரர் பார்வதிதேவியாருக்குத்
திருவாய் மலர்ந்துபதேசித்தருளிய

கெவுளி சாஸ்திரம்.

மூலமும் உரையும்.

இஃது
ஈரோட்டில் வசிக்கும்
வேலப்பாடி மகா-ள-ள-ஸ்ரீ இரத்தினசபாபதி
முதலியாரவர்கள் குமாரர் கண்டிராக்ட்டர்

வே. இராமலிங்கமுதலியாரால்

பற்பல ஏட்டுப்பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து
அனுபவமான வசனகாவியத்திற்குச்சில நூதன பா
டல்கள் இயற்றிக்கோர்வை நூலாகசசேர்த்துச்சக்
கரங்கள் அமைத்துப் பொருளுரைசெய்யப்பட்டு.

M. R. C. காவேரிஸ்டேஷன் மாஸ்டர் ம-ள-ள-ஸ்ரீ

E. M. சென்னகேசவலு நாயிடு

அவர்கள் வேண்டுகோளின்படி
மகா-ள-ள-ஸ்ரீ
R. சண்முக முதலியார் அவர்களது

ஈரோடு:
சகலகலாநிலைய அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
[முதற்பதிப்பு காபி 1000]

1893

(COPY-RIGHT REGISTERED)

S. P.
ஜீவானந்த
ஹம்ஸா சித்த வைத்தியசாலை

Digitized By Roja Muthiah Research Library

உ

சிவமயம்.

விளம்பரம்.

இதனால் சகலமான பேர்களுக்கும் அறிவிப்பது யாதெனில் இதனடியில் கையொப்பமிட்டிருக்கிற நம்மால் ஈரோடு சகலகலாநிலைய அச்சுக்கூடத்தில் பதிப்பித்து வெளியாக்கிய இக்கெவுளிசாஸ்திரத்தை மகாகனம்பொருந்திய கவர்னர்மெண்டாரவர்களின் 1867-௵த்தில் 25-வது ஆக்ட்டின் 20-வது பிரிவில் 6-வது விதியின்படி நம்மபேரால் ஆல்ரயிட்ஸ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறபடியால் இந்தப்புஸ்தகத்தை நம்முடைய எழுத்து மூலமான அனுமதியன்றியில் யாதொரு அச்சுக்கூடத்தலைவர்களும் ஏனையோர்களும் எவ்விதத்திலும் அச்சிட்டுவிற்பனை செய்யக்கூடாது. அவ்விதம் அச்சிட்டு விற்பனை செய்வார்களாயின் ஷை ஆக்ட்டில் சொல்லியிருக்கிறபடி கோர்ட்டார் மூலமாய் விதிக்கப்படும் சகலநிபந்தனைகளுக்கும் அதனால் நமக்கு உண்டாகும் சகல நஷ்டத்திற்கும் உள்ளாவார்களென்று இதன்மூலமாய் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

*மேலும் இப்புஸ்தகம் தேவையானவர்கள் நம்மிடத்திலும் ஈரோடு புஸ்தகவியாபாரம் ம-ா-ா-ஸ்ரீ இ. முருகேசமுதலியாரவர்களிடத்திலும் திருச்சிராப்பள்ளி புஸ்தக வியாபாரம் மகா ா-ா-ஸ்ரீ ஆ. சந்திரசேகர முதலியாரவர்களிடத்திலும் தாராபுரம் புஸ்தகவியாபாரம் மகா ா-ா-ஸ்ரீ அ. முத்துசாமிநாயுடு அவர்களிடத்திலும் கோயமுத்தூர் புஸ்தகவியாபாரம் ம-ா-ா-ஸ்ரீ இ. ஒன்னையகவுண்டர் அவர்களிடத்திலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இனியும் நூதனமாய் இதுவரை அச்சிட்டிராத சோதிடவாகடம் முதலிய பலவிதபுஸ்தகங்கள் அச்சிற்பதிப்பிக்க முயற்சித்து வருகிறது கூடிய சீக்கிரம் அச்சிட்டு வெளிப்படுத்தப்படும்.

இங்ஙனம்,

வே. இராமலிங்க முதலியார்.

கண்டிராக்டர்,

ஈரோடு.

Digitized By Roja Muthiah Research Library

உ

சிவமயம்.

கெவுளி சாஸ்திரம்.

முதல் பாகம்

விநாயகர் துதி.

பூரணஉருவாய்நாளும்பொருந்திஎம்மகமதூடே
காரணப்பொருளாயோங்குங்கருணையின்மிக்கவள்ளல்
நாரணன்முதலோர்காணாநம்பரமீன்றளித்த
வாரணமுகத்தோனைந்துகரத்தனைவணக்கஞ்செய்வாம்

(இ-ள்) பெருமைபொருந்திய இப்பூவுலகின் கண்ணுற்ற எல்லா சீவராசிகளின் அகமும் புறமும் பொருந்தி என்னாளும் எங்கணும்பரப்பிரம்மசொரூபமாயும் ஆதிகாரணப்பொருளாயும் கருணையின் மிகுந்த வள்ளலாயும் ஸ்ரீமன்நாராயணன் முதலான சகலதேவர்களாலும் காண்பற்கரிய திருஉருவத்தையுமுள்ள ஸ்ரீஎம்பெருமான் ஈன்றளித்த யானைமுகத்தையுடைய ஐந்துகரக்கடவுளாகிய ஸ்ரீவிநாயகமூர்த்தியை வணக்கஞ்செய்வாம். (எ-று)

நவக்கிரக துதி.

ஆதவனிந்துவக்கிரன்அறிஞனைசான்பளிங்கு
பேதமிலகாரிராகுபெருஞ்சிகிநவமாங்கோட்கள்
பாதமென்னெஞ்சிருத்திப் பதித்தச்சில்வெளியாய்விட்ட
ஏதமில்கெவுளிநூலைஎங்கணும்வியப்பாமாதோ

(இ-ள்) எம்மிறைவர்களாகிய சூரியன் சந்திரன் அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது ஆகிய ஒன்பது நவக்கிரகதேவதைகளின் மலர்ப்பதத்தை என்றும் எம்மா மத்திருத்தி குற்றமற்ற கெவுளிசாஸ்திரமாகிய இவ்வரியநூலையாம் அச்சிற்பதிப்பித்து வெளியாக்கேற்றியதைக் கண்ணுற்ற இப்பாரத கண்டத்திலுள்ளயாவரும் அதிக மகிழ்வையடைந்து உட்கொள்வர்கள். (எ-று)

நூல் வரலாறு.

சேர்திப்ராபரனுமைக்குத்தொன்றுபதேசித்தசுத்தநூலாங்
கோதிலாக்கெவுளிசாத்திரமிதனைப்பலபிரதிகொண்டுசோதித்
தாதியுமையாள்பதமென்னெஞ்சிருத்தியம்புவியிலடித்தேனச்சில்
தீதிலாதின்னூலைச்சோதித்துப் பார்த்துபலன்திருந்தச்சொல்வீர்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 105
P. M. DIST - TAMIL NADU

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்) ஆதிகாலத்தில் கைலையிலெழுந்தருளியிரானின்ற சோதிஉருவாகிய எம்பரமேசுவரன் எமதுஅன்னையாராகியஸ்ரீபார்வதாதேவியாருக்குத்திருவாய்மலர்ந்துபதேசித்தருளிய குற்றமில்லாத உண்மைநிறைந்தநூலாகிய இக்கெவுளிசாத்திரத்தை இப்பூமியின் கண்ணுள்ளயாவரும தெளிவாய்அறிந்துய்யும் பொருட்டுபலபேர்களிடமிருந்த ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு ஆராய்ந்தெடுத்துக் கோர்வையாக அச்சிற்பதிப்பித்திருக்கின்றனம் களங்கமற்ற இந்நூலைசெம்மையாய்சோதித்துப்பார்த்துபலன்கள் பொருந்தச்சொல்வீர்கள். (எ-று)

திசாவிதி அறியும்படி.

முந்தியகெவுளித்தானம்மொழியும்வாறறியவேண்டி
இந்திரனனலோன்காலனியக்கர்கோன்வருணன்வாயு
பிங்கலனீசனென்னும்பிரித்திட்டதிசைகளெட்டும்
வந்தவாறருக்கன்றானம்வருவதுவகுத்துச்சொல்லே

(இ-ள்) இந்திரன் கிழக்கு அக்கினிதென்கிழக்கு இமயன்தெற்கு நிருதி தென்மேற்கு வருணன் மேற்குவாய்வு வடமேற்கு குபேரன்வடக்கு ஈசானன்வடகிழக்கு இப்படி எட்டுத்திக்குக்கும் திசாநாதர்களைக்குறிப்பித்தஅருக்கனிலையைபிரித்துச்சொன்னேன் (எ-று) (க)

கிரகக்கூறு அறியும்படி.

சொல்லியமந்தன்வெய்யோன்சுடர்மதிநாளிற்கோட்கள்
எல்லையென்னவைத்திலாவர்மற்றநாளிடத்திலாவர்
வல்லிகேளிவர்களுக்குவகுத்தநாழிகைகளாய்ந்து
சொல்லுமேவன்னாளேழுக்கும்துய்யகோள்டருகும்வாறே.

(இ-ள்) சனி ஞாயிறு திங்கள் இந்தமூனறு நாளைக்கும் இராவி, மதி, சேய், புந்தி, குரு, புகர், காரி, செம்பாம்பு, ஆகஎட்டு கிரகங்களுமமுறையே வலமாகவருவார்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளிஇந்த நான்குநாளைக்கும் மேற்சொன்ன கிரகங்கள்முறையே இடமாகவருவார்கள் இனிஇந்த கிரகங்கள் பொதுவாக அந்தந்தநாட்களில் ஒவ்வொரு திசையிலும் புசிக்கும் நாழிகையை பிரித்துச்சொல்வாம். (எ-று) (உ)

கிரகஊண் பொதுநாழிகை அறியும்படி.

*சுருதியேழரையேயாகும்பனிமதிபதினொன்றேகால்
குருநியாறேகால்விகைக்கொற்றவன்பருகுமைந்து
ஒரவதாய்பொன்னேரன்பத்து வெள்ளியுமெட்டேமுக்கால்
காரிவன்மூன்றேமுக்கால்கன்னல்மேற்றிசைபகர்வாம்

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்) ஞாயிற்றுக்கிழமைக்கு $7\frac{1}{2}$, திங்கட்கிழமைக்கு $11\frac{1}{4}$ செவ்வாய்க்கிழமைக்கு $6\frac{1}{4}$, புதன்கிழமைக்கு 5, வியாழக்கிழமைக்கு 10, வெள்ளிக்கிழமைக்கு $8\frac{3}{4}$, சனிக்கிழமைக்கு $3\frac{3}{4}$ இந்த நாழிகை வீதம் ஒவ்வொரு கிரகங்களும் மாறிவரும் இனிமேற்படி தினங்களுக்கு மேற்சொன்ன கிரகங்கள் மாறிவருந் திசையையும் பிரித்துச் சொல்வாம். (எ-று) (௩)

உதயக்கோள் விபரமறியும்படி.

பகர்சனிஅங்கிதோன்றிப்பகலதுமுப்பதெட்டுத்
திசைவலம்மூன்றேமுக்கால்சென்றிராதெற்குத்தோன்றி
நிகர்கதிரோலனும்சேர்ந்துநிசிபகலறுபதுக்கும்
வகைபுருந்திசைகளெட்டும்வலம்வரும்சாமந்தானே.

(இ-ள்) சனிக்கிழமை பகல் 30-நாழிகையும் ஒரு திசைக்கு $3\frac{3}{4}$ நாழிகை வீதம் கிழக்கு இந்திரன் திசைமுதல் வடகிழக்குஈசானன்றிசைவரை எட்டுத்திசைக்கும் சனிக்கிழமை இராத்திரி 30-ஞாயிற்றுக்கிழமை பகல்30-ஆக 60-நாழிகையும் ஒருதிசைக்கு $7\frac{1}{2}$ நாழிகைவீதம் தெற்கு இயமன் திசைமுதல் தென்கிழக்கு அக்கினிதிசைவரை எட்டுத்திசைக்கும் மேற்சொன்ன கிரகங்கள்நின்ற இடத்திலிருந்து முறையே வலமாக வருவார்கள். (எ-று) (௪)

தானேகேளருக்கன்வாரம்தனிக்கங்குல்முதலதாக
வானமாந்திங்கள்வாரம்வரும்வலம்பகலிராவும்
தேனமர்குழலாய்தென்மேற்றிசைமுதல்பதினொன்றேகால்
ஆனநாழிகைதொண்ணூறும்அட்டமம்செல்லுமென்றே.

(இ-ள்) வண்டுகள்மொய்த்த கூந்தலையுடையவளே கேட்பாயாக ஞாயிற்றுக்கிழமை இராத்திரி 30-திங்கட்கிழமைபகல் இராத்திரி 60-ஆக 90-நாழிகையும் ஒரு திசைக்கு $11\frac{1}{4}$-நாழிகைவீதம் தென்மேற்கு நிருதிதிசைமுதல் தெற்கு இயமன்திசைவரை 8-திசைக்கும் மேற்சொன்ன கிரகங்கள் முறையேநின்ற இடத்திலிருந்து வலமாக வருவார்கள். (எ-று) (௫)

என்றபின்சேயோன்வாரமெழும்பிடும்வருணன்றிக்கில்
அன்றுகாலைதுடங்கிஅட்டரும்ராஇருபதெல்லை
மன்றிலாறேகாலாக மாறிடபோந்திசைகளெட்டும்
நின்றிடும்தானம்தோன்றிநீளிடயசெல்லுமவாய்ந்தே.

(இ-ள்)செவ்வாய்க்கிழமை பகல் 30-இராத்திரி 20-ஆக 50 நாழிகையும் ஒரு திசைக்கு $6\frac{1}{4}$-நாழிகை வீதம் மேற்கு வருணன் திசைமுதல் வடமேற்கு வாயுதிசைவரை எட்டுத்திசைக்கும் மே

Digitized By Roja Muthiah Research Library

ற்சொன்ன கிரகங்கள் முறையே நின்ற இடத்திலிருந்து இடமாக வருவார்கள். (எ-று) (௬)

வாய்ந்தசெய்விடியப்பத்தும்வளர்புதன்பகலும்வாயு
சாய்ந்தொருதிசைக்கைந்தாகசார்ந்திடுமிடமதாக
ஆய்ந்தவனிரவும்பொன்னேனம்பதும்வடக்குதோன்றி
ஏந்திளமுலையாளெட்டுத்திசையினுமிடமேயாகும்

(இ-ள்) தேமல்படர்ந்த இளங்கொங்கைகளை யுடையவளே கேட்டாயாக செவ்வாய்க் கிழமை இராத்திரி விடிய 10-புதன் பகல்30-ஆக 40-நாழிகையும் ஒரு திசைக்கு 5 நாழிகை வீதம் வடமேற்கு வாயுதிசைமுதல் வடக்கு குபேரன்றிசை வரைக்குமெட்டு திசைக்கும் புதன்கிழமை இராத்திரி 30-வியாழக்கிழமைபகல் 30-இராத்திரி 20-ஆக 80-நாழிகையும் ஒருதிசைக்கு 10-நாழிகை வீதம் வடக்கு குபேரன்றிசைமுதல் வடகிழக்கு ஈசானன்றிசை வரை எட்டுத்திசைக்கும் மேற்சொன்ன கிரகங்கள் முறையேநின்ற இடத்திலிருந்து இடமாக வருவார்கள். (எ-று) (௭)

ஆகியவியாழந்தன்னிலன்றிராவிடியப்பத்தும்
போகியபுகரோன்றன்னிற்பொருந்தியபகலுங்கங்குல்
தோகைகேள்வடகிழக்குத்தொட்டுமேஅருக்கன்முன்போற்
போகுமேயெட்டேமுக்கால்புகவிடமாகக்கண்டாய்

(இ-ள்) மயில்போன்ற சாயலையுடைய பெண்ணே கேட்பாயாக வியாழக்கிழமை இராத்திரிவிடிய 10-வெள்ளிக்கிழமைபகல் இரவு 60-ஆக 70-நாழிகை யும் ஒரு திசைக்கு 8¾ நாழிகை வீதம் வடகிழக்கு ஈசானன்றிசைமுதல கிழக்கு இந்திரன்றிசைவரை எட்டுத்திசைக்கும் மேற்சொன்ன கிரகங்கள் நின்ற இடத்திலிருந்து முறையே இடமாக வருவார்கள். (எறு) (௮)

இராகுக்கோள் உதயமறியும்படி.

கண்டவிக்கோட்களெட்டுங்காட்டியதிசையேசெல்லுந்
துண்டராமந்தன்முன்னேதோன்றியேகுதித்துநிற்கும்
மிண்டவன்வலமிடத்துமாறும்போததுவுமாறி
வண்டமர்குழலாயிராகுவருமந்தன்முன்னேதோன்றி

(இ-ள்) இந்தக்கோட்களெட்டும் அவரவர்களுக்கு சொன்ன திசையில் வலமுமிடமுமாறி அந்தந்த வாரத்தில் நிற்கும்போது சனிஎந்த திசையில் நிற்கிறனோ அந்ததிசைக்கு முன்றிசையில்கேதுவும் அவ்விதமாகவேமாறி நிற்பன். (எ-று) (௯)

Digitized By Roja Muthiah Research Library

கிரகங்களின் ஆட்சி அதாவது தினச்சக்கரம் அறியும்படி.

தோன்றியஅருக்கன்கீழ்பால்சொல்லியசெவ்வாய்தென்கீழ்
ஆன்றபொன்தெற்குபுந்தியாகியதென்மேல்வெள்ளி
ஏன்றியமேற்குக்காரிஎழில்வடமேற்குத்திங்கள்
தான்றியவடக்குப்பாம்புசாற்றியஈசன்றானே.

(இ-ள்) கோட்களெட்டுக்கும் ஆட்சி வீடாவன சூரியனுக்கு கிழக்கு, சந்திரனுக்கு வடக்கு, செவ்வாய்க்கு தென்கிழக்கு, புதனுக்கு தென்மேற்கு, குருவுக்கு தெற்கு, சுக்கிரனுக்கு மேற்கு, சனிக்கு வடமேற்கு, செம்பாம்புக்கு வடகிழக்கு, இவ்விதம் கிரகங்களின் ஆட்சி வீடாகும். (எ-று) (௰)

தானுரைசெய்தகோட்கள்தன்றிசையுதையந்தோன்றி
போனநாழிகையோர்சாமம்போகுமோர்திசைக்குமாறி
வானுலாமயில்போன்மின்னேவலத்தினிற்கோட்கள்செல்லும்
ஆனநூற்றினத்தின்வட்டமாகவேசொல்வாமென்றே

(இ-ள்) வானுலாவிய மயில்போன்ற சாயலையுடைய பெண்ணேகேட்டாயாக மேற்சொன்ன கோட்கள் பிரதிதினம் காலையவரவர் ஆட்சி வீட்டில் தோன்றி ஒருதிசைக்கு $7\frac{1}{2}$-நாழிகைவிதமுறையேவலமாக மாறிச்செல்லும் இதைதினச்சக்கரம் என்றுசொல்வாம். (எ-று) (௰௧)

இராகுக்கோள் பாய்ச்சலறியும்படி.

என்றபின்ராகுபாய்ச்சலிரவிநாள்கிழக்குத்திங்கள்
ஒன்றியவடக்குச்செவ்வாயூன்றிதென்கிழக்குப்புந்தி
நின்றதென்மேற்குப்பொன்னன்திகழ்வதுதெற்குவெள்ளி
சென்றிடும்மேற்குகாரிதிகழ்வடமேற்குதோன்றும்

(இ-ள்) ஞாயிற்றுக்கிழமைக்கு சூரியனாட்சியான கிழக்குத்திக்கிலும் திங்கட்கிழமைக்கு சந்திரனாட்சியான வடக்குத்திக்கிலும் செவ்வாய்க்கிழமைக்கு செவ்வாய்க்கு ஆட்சியான தென்கிழக்குத்திக்கிலும் புதன்கிழமைக்கு புதனுக்கு ஆட்சியானதென்மேற்குத்திக்கிலும் வியாழக்கிழமைக்கு குருவுக்கு ஆட்சியான தெற்குத்திக்கிலும் வெள்ளிக்கிழமைக்கு சுக்கிரனுக்கு ஆட்சியான மேற்குத்திக்கிலும் சனிக்கிழமைக்கு சனிக்கு ஆட்சியான வடமேற்குதிக்கிலும் அந்தந்த தினத்தில் காலையுதயத்தில் மேற்படி திக்குகளில் இராகு உதிப்பன் இனிமேல் உதித்த திக்கிலிருந்து மற்றொரு திக்குக்கு பாயும் விபரம் சொல்வாம். (எ-று) (௰௨)

தோன்றியமூன்றேமுக்கால்சூழ்திசைஒன்றுக்கொன்று
சான்றவரிடத்தில்நாலாந்திசையினில்இடமாய்ச்சாடும்

தேன்றுளித்தாராய்எட்டுத்திசையினும்செல்லுமாங்கே
மீன்கயல்விழியாய்கங்குல்மீண்டுமிப்படியேபாயும்

(இ-ள்) மேற்சொன்ன இராகு கோளானது ஒவ்வொருதினத்திலும் தான்தோன்றிய திசைக்கு இடமாக இருக்கும் நாலாந்திசையில்பாயும் மீண்டும் அதற்கிடமாக நாலாந்திசையில் பாயும் இந்த அடைவே இரவும்பகலும் பாய்ந்துதிசை ஒன்றுக்கு 3¾நாழிகைவிதம் நின்றிருக்கும் தேன்றுளிக்கும் மாலையணிந்த மீன்போன்ற கண்களையுடையவளே. (எ-று) (௰௨)

இராகுநிற்கும் திசாநாழிகையைக்குறிப்பிக்கும் பாய்ச்சல்சக்கரம்

கிழமை.	திசை.	பகல் நாழிகை.	திசை.	இரவு நாழிகை.
ஞாயிறு	இந்திரன்	3¾-வரை	இந்திரன்	33¾-வரை
	வாயு	7½-வரை	வாயு	37½-வரை
	இயமன்	11¼-வரை	இயமன்	41¼-வரை
	ஈசானன்	15-வரை	ஈசானன்	45-வரை
	வருணன்	18¾-வரை	வருணன்	48¾-வரை
	அக்கினி	22½-வரை	அக்கினி	52½-வரை
	குபேரன்	26¼-வரை	குபேரன்	56¼-வரை
	நிருதி	30-வரை	நிருதி	60-வரை
திங்கள்	குபேரன்	3¾-வரை	குபேரன்	33¾-வரை
	நிருதி	7½-வரை	நிருதி	37½-வரை
	இந்திரன்	11¼-வரை	இந்திரன்	41¼-வரை
	வாயு	15-வரை	வாயு	45-வரை
	இயமன்	18¾-வரை	இயமன்	48¾-வரை
	ஈசானன்	22½-வரை	ஈசானன்	52½-வரை
	வருணன்	26¼-வரை	வருணன்	56¼-வரை
	அக்கினி	30-வரை	அக்கினி	60-வரை
செவ்வாய்	அக்கினி	3¾-வரை	அக்கினி	33¾-வரை
	குபேரன்	7½-வரை	குபேரன்	37½-வரை
	நிருதி	11¼-வரை	நிருதி	41¼-வரை
	இந்திரன்	15-வரை	இந்திரன்	45-வரை
	வாயு	18¾-வரை	வாயு	48¾-வரை
	இயமன்	22½-வரை	இயமன்	52½-வரை
	ஈசானன்	26¼-வரை	ஈசானன்	56¼-வரை
	வருணன்	30-வரை	வருணன்	60-வரை

Digitized By Roja Muthiah Research Library

கிழமை.	திசை.	பகல் நாழிகை.	திசை.	இரவு நாழிகை.
புதன்	நிறுதி	$3\frac{3}{4}$-வரை	நிறுதி	$33\frac{3}{4}$-வரை
	இந்திரன்	$7\frac{1}{2}$-வரை	இந்திரன்	$37\frac{1}{2}$-வரை
	வாயு	$11\frac{1}{4}$-வரை	வாயு	$41\frac{1}{4}$-வரை
	இயமன்	15-வரை	இயமன்	45-வரை
	ஈசானன்	$18\frac{3}{4}$-வரை	ஈசானன்	$48\frac{3}{4}$-வரை
	வறுணன்	$22\frac{1}{2}$-வரை	வறுணன்	$52\frac{1}{2}$-வரை
	அக்கினி	$26\frac{1}{4}$-வரை	அக்கினி	$56\frac{1}{4}$-வரை
	குபேரன்	30-வரை	குபேரன்	60-வரை
வியாழம்	இயமன்	$3\frac{3}{4}$-வரை	இயமன்	$33\frac{3}{4}$-வரை
	ஈசானன்	$7\frac{1}{2}$-வரை	ஈசானன்	$37\frac{1}{2}$-வரை
	வறுணன்	$11\frac{1}{4}$-வரை	வறுணன்	$41\frac{1}{4}$-வரை
	அக்கினி	15-வரை	அக்கினி	45-வரை
	குபேரன்	$18\frac{3}{4}$-வரை	குபேரன்	$48\frac{3}{4}$-வரை
	நிறுதி	$22\frac{1}{2}$-வரை	நிறுதி	$52\frac{1}{2}$-வரை
	இந்திரன்	$26\frac{1}{4}$-வரை	இந்திரன்	$56\frac{1}{4}$-வரை
	வாயு	30-வரை	வாயு	60-வரை
வெள்ளி	வறுணன்	$3\frac{3}{4}$-வரை	வறுணன்	$33\frac{3}{4}$-வரை
	அக்கினி	$7\frac{1}{2}$-வரை	அக்கினி	$37\frac{1}{2}$-வரை
	குபேரன்	$11\frac{1}{4}$-வரை	குபேரன்	$41\frac{1}{4}$-வரை
	நிறுதி	15-வரை	நிறுதி	45-வரை
	இந்திரன்	$18\frac{3}{4}$-வரை	இந்திரன்	$48\frac{3}{4}$-வரை
	வாயு	$22\frac{1}{2}$-வரை	வாயு	$52\frac{1}{2}$-வரை
	இயமன்	$26\frac{1}{4}$-வரை	இயமன்	$56\frac{1}{4}$-வரை
	ஈசானன்	30-வரை	ஈசானன்	60-வரை
சனி	வாயு	$3\frac{3}{4}$-வரை	வாயு	$33\frac{3}{4}$-வரை
	இயமன்	$7\frac{1}{2}$-வரை	இயமன்	$37\frac{1}{2}$-வரை
	ஈசானன்	$11\frac{1}{4}$-வரை	ஈசானன்	$41\frac{1}{4}$-வரை
	வறுணன்	15-வரை	வறுணன்	45-வரை
	அக்கினி	$18\frac{3}{4}$-வரை	அக்கினி	$48\frac{3}{4}$-வரை
	குபேரன்	$22\frac{1}{2}$-வரை	குபேரன்	$52\frac{1}{2}$-வரை
	நிறுதி	$26\frac{1}{4}$-வரை	நிறுதி	$56\frac{1}{4}$-வரை
	இந்திரன்	30-வரை	இந்திரன்	60-வரை

Digitized By Roja Muthiah Research Library

*இந்தச்சக்கரத்தினடைவே இராகு, அந்தந்த வாரங்களில் அந்தந்த திசைகளில் குறித்த நாழிகைவரையில் நிற்குமின்னிலேயறிந்து சுபக்கிரகங்களுடன் இராகு சேர்ந்திருக்கில் அந்ததிக்கிலிருந்து வருகிறபதார்த்தங்களில் விஷம்கலந்து வருமென்றும் பாபக்கிரகங்களுடன் இராகு சேர்ந்திருக்கில் விஷம்கலராமல் வருமென்றும் கண்டுணர்ந்து பலனைச்சொல்லுக சந்திரன், புதன், குரு, சுக்கிரன், சுபர்களாம் இதில் சந்திரனைமாத்திரம் விருத்தி சந்திரனில் சுபனென்றும் க்ஷீணசந்திரனில் அசுபனென்றும் கொள்க சூரியன், செவ்வாய், கேது அசுபர்களாம் இவர்கள்ஆட்சியில் இருக்குங்காலத்தில்சுபர்களாகவும் மற்ற இடத்திலிருக்குங்காலத்தில் அசுபர்களாகவும் கொள்க.

கிரகங்களின் நட்புபகை அறியும்படி.

பாய்பரிகதிரோன்நட்புபைம்பொன்னும்பனிமதிக்குத்
தூயபொன்புலவன்சேய்க்குத்தூதுவன்நட்புபுந்திக்
காய்கதிரொழியமற்றக்கோட்கள்நட்பாகும்பொன்னுக்
கேய்செவ்வாயொழியமற்றக்கோட்கள்நட்பாகுமென்றே.

(இ-ள்) சூரியனுக்கு குரு, உறவுமதி, சேய், புந்தி,புகர்காரி, பாம்புபகை சந்திரனுக்கு குருபுதன் உறவு, இரவி, சேய்புகர்காரி பாம்புபகை செவ்வாய்க்கு புதன் உறவு இரவிமதி குருபுகர்காரி பாம்புபகை புதனுக்குமதி, சேய்,குரு,புகர்காரி, பாம்பு,உறவுசூரியன்பகை குருவுக்கு இரவிமதி புந்திபுகர்காரி பாம்பு உறவு செவ்வாய் பகையாம் (எ-று) (௰௪)

என்றபின்புகர்க்குநட்புஇயல்சனிசெவ்வாய்புந்தி
ஒன்றியசனிக்குந்தூதனுடன்புகரசர்நட்பா
மொன்றுவர்மற்றோர்பாம்புக்குறும்பகைகதிருந்திங்க
ளன்றலர்குழலேகேளாயறிந்துரைபலனைத்தானே.

(இ-ள்) சுக்கிரனுக்குசேய், புந்தி,காரி, உறவு, இரவிமதி,குரு பாம்புபகை சனிக்கு புதன் குரு சுக்கிரன் உறவு இரவி மதிசேய் பாம்புபகை பாம்புக்கு சேய்புந்தி குருபுகர்காரி உறவுசூரியன்சந்திரன்பகைஇப்படி உறவுபகையறிந்துகெவுளி சொன்னதிசையிலிருந்து வருகிற பதார்த்தங்கள் சத்துருவிடத்திலிருந்தும் மித்துருவிடத்திலிருந்தும் வருகிறபதார்த்தமென்று அறிந்து சொல்வாய் அன்றலர்ந்த பூவைத்தரித்த கூந்தலையுடையவளே இவ்விதம் கிரகங்களின் நட்புபகை விரித்துச்சொன்னோம். (எ-று) (௰௫)

Digitized By Roja Muthiah Research Library

கிரகங்களின் சாதி நிறம் அடையாளமறியும்படி.

அருக்கனரசன்பசுஞ்சிகப்புஆவான்மட்டமறுமருங்கில் [னும்
நெருக்குமதியமரையோன்பெண்ணெடியன்வெள்ளைநிறம்பொன்
பெருக்கவடுவுண்டவன்றலைமேல்பெருகுஞ்செவ்வாயமுர்சாதி
யருக்கனிறமாமுகத்தில்மறுவாகுங்குள்ளனடையாளம்

(இ-ள்) கெவுளிசொன்ன உதயத்தில் சூரியன்நின்றால் ராஜா பச்சை அல்லது சிகப்புநிறம் நீட்சி இல்லாதவன் மருங்கில் வடிவுடையவனாயிருப்பன் சந்திரன்நின்றால பிராமணன்பெண் நீட்சியுள்ளவன் துய்யவெள்ளை அல்லது பொன்னிறமுடையவன் தலையில் வடிவுடையவனாயிருப்பன் செவ்வாய்நின்றால் பிராமணன் சிகப்பு நிறம் முகத்தில் வடிவுடையவன் குள்ளனாய்இருப்பன். (எ-று)

ஆளம்புந்தியவன்வணிகனவனெடியன்பொதுநிறத்தன்
தோளின்கீழேமுதுகில்மறுச்சொன்னோம்வியாழமந்தணனும்
நீளமுடையபுயத்தில்வடுநிற்கும்பொன்னும்வெள்ளிசுர
வேளின்சாதிகண்ணில்வடுவிருக்கும்நெடியன்வெண்மைநிறம்

(இ-ள்) கெவுளிசொன்ன உதயத்தில் புதன் நின்றால் வைசியன் நீட்சியுள்ளவன் பொதுநிறம்அல்லது மாநிறம்தோளின் கீழ் முதுகில் வடுவுடையவனாய் இருப்பன் குரு நின்றால் பிராமணன் நெடியன்தோளில் வடுவுடையவன் பொன் நிறமாய் இருப்பன்சுக்கிரன்நின்றால் சூத்திரன்கண் ஊனம்அல்லது கண்ணில் வடுவுடையவன் மிகவும் நீட்சியுள்ளவன் வெண்மை நிறமுள்ளவன். (எ-று)

நிறக்கச்சனியன்றாழ்குலமாம்நெடியனல்லன்மிகக்கருப்பன்
மருக்கண்டிலதோர்காலூனமன்னுமிராகுபரைச்சாதி
பிறக்கும்வடிவுபெண்ணாகும்பேதைவடிவனாட்டியத்தி
லொருக்குமுடலின்பாதியின்கீழூனமவனுக்குளதாமே.

(இ-ள்) கெவுளிசொன்ன உதயத்தில் சனிநின்றால் கீழ்சாதி நீண்டல்லாத உருவமுடையவன் அதிககருப்பு நிறமுள்ளவன்ஒரு காலில்ஏதாவது மருவிருக்கும் அல்லதுஊனமாய் இருக்கும் இராகுநின்றால் பரைச்சாதி பெண்அல்லது பெண்வடிவு பாதநாட்டிய வல்லவன்பாதி உடம்பின்கீழ் ஊனமாய்இருப்பன். (எ-று) (௰அ)

ஆமேகேதுபரையன்கீழாகுங்கறுப்பனுபகாரித்
தாமேஅறியத்தலையில்வடுத்தாங்கியிருப்பன்மிகநெடியன்
தேமல்படர்ந்தமுலையாளேதிசையுங்குணமும்வரும்வாறும்
தாமேகொணர்ந்துதருவாரும்தம்மாலறியச்சாற்றுவமே.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்) கெவுளிசொன்ன உதயத்தில் கேதுநின்றால் பறைய னிலும் கீழ்சாதி கருப்பன் உபகாரிதலையில் வடுவுடையவன் மிக வும் நெடியவன் தேமல்படர்ந்த கொங்கைகளையுடையவளே இவ் வாறுகிரகங்கள் நிற்கும்நிலையை அறிந்துவரும் பலனும்சாதியும்நி றமும்திசையும் குணமும்வரும் விதமும்கொண்டு வருபவர்கள்இ ன்னுமென்றும் தெரிந்து சொல்லும் பொருட்டு விரித்துச்சொன் னோம். (எ-று) (௰௯)

பலன் சொல்வதற்கு விபரம் அறியும்படி.

சாற்றுங்கெவுளிபலனுரைக்கத்தனிச்சக்கரமுமாரூடந்
தோற்றுமுதயமெதிர்கயிறுசொல்லுமிந்தநான்கின்கோ
ளாற்றும்பலனையறிந்துரைப்பீரதனிலிராகுஅமர்ந்திடிலோ
ஏற்றக்குறைச்சல்தனையுணர்ந்துயாவுமுரைக்கஅறிவாயே.

(இ-ள்) கெவுளிசொன்ன பலனையுரைக்கும் விதமெப்படியெ ன்றால்தினச்சக்கரம் ஆரூடம்உதையம் எதிர்கயிறு இந்தநான்குஸ் தானமுமறிந்து மேற்படிஸ்தானங்களிலுள்ள கோட்களுடன்இரா குவந்து சேருமாகில் மேற்படிகோட்களின் பகைநட்பையறிந்து ஏற்றக்குறைச்சலாக பலாபலனைப்பிரித்து ஏறியபலன் நல்லதோ கெட்டதோ அதைத் தெரியச்சொல்ல வேண்டுமென்பதை அறி வாய். (எ-று) (உ௰)

அறிவாய்தினச்சக்கரமாகுமந்தக்கெவுளிசொன்னதிசைக்
குறியாய்நின்றகோளாகுங்குறிக்குமிடத்தின்கோளதுவே
நெறியாரூடக்கோளென்பர்நிலைபெற்றிடமும்வலமாகுந்
தெரிவாயுதையக்கோளெதிர்கோள்சிறப்பாமெதிராங்கயிறென்றார்

(இ-ள்) கெவுளிசொன்னதிசையில்தினச்சக்கரத்தின்படி அந்த நேரத்திற்கு எந்தக்கோள்நிற்கிறதோ அதைதினச்சக்கரக்கோளெ ன்றும்அந்ததிசையில் மேற்படிதினச்சக்கரத்தின்படி ஆட்சிக்கோ ளைஆரூடக்கோளென்றும் அந்தத்திசையில் அன்றையத்தினம்வல ம்இடமாகவரும் வாரக்கோளை உதயக்கோளென்றும் மேற்படிஉ தயத்திற்கு நேர்எதிர்வீட்டிலிருக்குங்கோளை எதிர்கயிறுகோளெ ன்றும் நீதெரிவாயாக. (எ-று) (உக)

ஆரேநின்றகோள்பண்டமாகுமாட்சிகொணர்வர்நிறம்
நேரேசாதிஉருவம்திசைநின்றகயிற்றால்பாத்திரமாம்
ஓரேஉதயக்கோளதுகொண்டுரைபக்குவமாமடையாளம்
சேரேயாட்சிபாம்புரிலோசேர்ந்துவரும்நஞ்சதுதப்பா,

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்) கெவுளிசொன்ன திசையிலும்நேரத்திலும் தினச்சக்கரத்தில்நின்ற கோளைக்கொண்டு வருகிறபண்டமின்னதென்றும் அந்தஆட்சிக்கோளைக்கொண்டு அதுகொண்டுவருகிறவர்களின்ன நிறம்சாதிபேதம் திசைஇன்னதென்றும் உதயத்திற்கெதிர் கயிற்றிலாரூடக்கோளைக்கொண்டு அந்தப்பண்டம் இன்னபாத்திரத்தில் வைத்துவருகிறதென்றும் வாரஉதயக்கோளைக்கொண்டு அதுஇன்னபக்குவமாய் கட்டிவருகிற அடையாளமின்னதென்றும் ஆட்சியில்இராகு கேதுநின்றாலும் சேர்ந்திருந்தாலும் அந்ததிசையிலிருந்துவருகிறபண்டங்களில் தப்பாமல் விஷம்கலந்து வருமென்றும் சொல்வாய். (எ-று) (உஉ)

திசைகளின் பிரதிபதம் அறியும்படி.

தப்பாதிசைச்சக்கரநான்குஞ்சாற்றும்பெயர்கோளெரிபுகைமற்
றொப்பார்நீழல்செறுநீராமுரைக்கும்பூமிநீறுதழல்
வைப்பாமெட்டுந்திசையினுக்கும்வகுத்துகிழக்குமுதலாக
இப்பாருள்ளஈசன்வரைஇயற்றிப்பலனையுரைப்பாயே.

(இ-ள்) மேற்சொன்ன சக்கரத்தில்கோட்களை அமைத்துஅதில் எரி,புகை, நிழல்,செரு, நீர்பூமி,நீறு, தழல்இந்த எட்டுப்பதத்தையும்கிழக்கு இந்திரன்முதலாக வடகிழக்குஈசானன்வரை ஒவ்வொருதிக்கினும் தனித்தனிமுறையே அமர்த்திகோட்கள்நிற்கும் திசையில் உள்ளகொடூரம்சாந்தம் இதுகளைதெளிவாயறிந்துஅதற்குரியபலனை உரைப்பாய். (எ-று) (உ௩)

பிரதிபத பலனறியும்படி. ௳

உரைக்குமெரிசாவாம்புகைக்குஉடனேபிணக்குநிழல்சிறுகு
பெருக்குஞ்செறுநீராம்பூமிபெரியநன்மைஇலாபமுமாம்
தரைக்கண்ணீறுமீதில்சுகந்தழலில்பிணக்குச்சற்றல்ல
வரைக்கோன்மகளேசக்கரத்தின்வலுமையதனையாம்சொன்னோம்

(இ-ள்) கிழக்குஅதாவது எரிஇதில் கெவுளிசொன்னால்சாவு தென்கிழக்கு புகைஇதில் பிணக்குச்சண்டை தெற்குநிழல்இதில் துன்பமுண்டாம் தென்மேற்குசெறு மேற்குநீர் வடமேற்குபூமி இதில்அதிகநன்மையும் இலாபமும்உண்டாகும் வடக்குநீறுஇதில் அதிகசுகம் வடகிழக்குதழல் இதில்கெவுளிசொன்னால் தீராதசச்சரவுண்டாகும்இதின் வலுமையைச்சொன்னோம் பர்வதராசன்புத்திரியாகிய பார்வதியேகேட்பாயாக. (எ-று) (உ௪)

கெவுளிசொல் பலன் இன்னாருக்கென்ற விபரமறியும்படி.

சொன்னோம்நிருதிவாயுவுடன்தோற்றும்கதிரோன்றிசைதனக்கா

Digitized By Roja Muthiah Research Library

டன்னேன்கனலோனீசானன்மருவி இருந்தோர்சுற்றத்தார்
பின்னேதெற்குவடக்கும்மிதுபிறர்க்குமாசர்தமக்காகும்
பொன்னேகெவுளிபலன்பகலில்புகல்வாய்கண்டுவருமாறே.

(இ-ள்) தென்மேற்கு வடமேற்குகிழக்கு இந்தமூன்றுதிக்குகளிலும்கெவுளி சொன்னால்அந்தப்பலன் தனக்கென்றும் தென்கிழக்குமேற்கு வடகிழக்குஇந்தமூன்று திக்குகளிலும்உரைத்தபலன்தன்னுடன்கூடி இருந்தவர்களுக்கும் சுற்றத்தாருக்கென்றும்தெற்குவடக்கு இந்தஇரண்டு திக்குகளிலுமுரைத்தபலன் அரசருக்கும்அன்னியருக்கென்றும் பகலில்சொல்லும் கெவுளிக்குஇவ்விதபலனைத்தெரிந்து உரைப்பாய்பெண்ணே. (எ-று) (௨௫)

மாறியகிழக்குத்தெற்குவடக்கதுதனக்கேயாகும்
கூரியவடகிழ்தென்கிழ்குடதிசையுறவுசேர்ந்தோர்
ஆரியவடமேல்தெனமேலமர்ந்திடுமரசர்மற்றோர்
காரிருள்தன்னிற்கெவுளிகதித்திடில்பலன்கண்டாடாய்.

(இ-ள்) கிழக்குதெற்கு வடக்கு இந்த திக்குகளில் கெவுளி சொன்னால்அந்தப்பலன் தனக்கென்றும் வடகிழக்குதென்கிழக்குமேற்குஇதிலுரைத்தபலன் உறவோருக்கும் அருகிலிருந்தவர்களுக்கென்றும்வடமேற்கு தென்மேற்குஇதில் உரைத்தபலன் அரசருக்கும் அன்னியருக்கென்றும் இராத்திரிகாலத்தில்சொல்லுங்கெவுளிக்குஇவ்விதமாய் கண்டுபலனைத்தெரிவிப்பாய். (எ-று) (௨௬)

ஆடுசிங்கம்சிலைதனக்காம்யாழும்துலைசால்கிளைநேர்க்காம்
ஓடுமிடபம்சுராகன்னிஉடனேஇருந்தார்தமக்காகும்
நாடுங்கடகத்தேள்மீனம்நண்ணுமரசரயலார்க்காம்
பாடுங்கிள்ளைமொழியாளேபகர்வேன்பலன்கள்வருமாண்டே.

(இ-ள்) தத்தைபோன்ற மொழியை யுடையவளே கேட்பாயாகமேஷம் சிங்கம்தனுசு இந்தராசிகளில் கெவுளிசொன்னபலன் தனக்காகும் மிதுனம்துலாம் கும்பம்இதிலுரைத்தபலன் உறவினருக்காகும் ரிஷபம்கன்னி மகரம்இதிலுரைத்த பலன் கூடஇருந்தவர்களுக்காகும் கடகம்விருச்சிகம் மீனம்இதிலுரைத்த பலன்அரசர்களுக்கும் அயலாருக்கும்ஆகும் இனிமேற்படி பலன்கள்கிடைக்கும்காலத்தை தெரிவிப்பாம். (எ-று) (௨௭)

பலன் கிடைக்கும் காலமறியும்படி.

ஆண்டாவங்காரிஅயனமருக்கன்மால்
பூண்டதொருபொன்றிங்கள்போற்றியேநீண்ட
திரண்டபுகரோன்பக்கம்சேயொருநாள்திங்கள்
இரண்டேகால்நாளென்றியம்பு

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்) வடகிழக்கு கேதுஆட்சி வடமேற்குசனி ஆட்சிஇதி ல்கெவுளிசொன்னால் அதின்பலன் ஒருவருஷத்தில் வரும்கிழக்கு சூரியனாட்சி தென்மேற்கு புதன்ஆட்சி இதிலுரைத்தபலன் ஆறு மாதத்தில் வரும்தெற்கு குருஆட்சிஇதிலுரைத்த பலன்ஒருமாத த்தில்வரும் மேற்குசுக்கிரனாட்சி இதிலுரைத்தபலன் பதினைந்து நாளையில்வரும் தென்கிழக்குசெவ்வாய் ஆட்சிஇதிலுரைத்தபலன் ஒருநாளில்வரும் வடக்குசந்திரன் ஆட்சிஇதிலுரைத்தபலன் இர ண்டேகால் நாளையில்வருமென்று சொல்வாய். (எ-று) (௨௫)

சூரியன் ஆரூடபலன்.

உரைக்கக்கதிராமாட்சியி னிலுதயதபனன்வருமாகில்
தரைக்கண்மகிபர்தனிலிருவர்தம்மிற்பகைச்சொலக்கினிபயந்
திரைக்கண்மதியமதனிலுரில்செம்பொன்னுடைவாகனங்கள்
நிரைக்கும்பல்லாபரணங்கள்நிருபர்சொல்லும்நல்வார்த்தை

(இ-ள்) கெவுளிசொன்ன திசையில் ஆதித்தனாட்சியில் ஆதி த்தனுதயமாகில் இராசாக்களுக்கு தங்களிலே விரோதமான செ ய்திஅக்கினிபயமுண்டாகும் சந்திரனுதயமாகில் பொருள் ஆடை வாகனம் பொன்னாபரணம் இராசாக்களினாலேநல்லசமாச்சாரமா னஓலைவரும் சந்தோஷமான செய்தியும்வரும். (எ-று) (௨௬)

நல்லக்கதிராமாட்சியினில்நண்ணில்செவ்வாய்சிகப்பாடை
வல்லஇறைச்சிசெந்நிறப்பூவரத்துமூவர்வருவரதில்
சொல்லமறையோன்றுவொருவன்சோரிநிறத்தன்மிகக்குள்ளன்
அல்லலில்லைமுகத்தில்மறுவடர்ந்தேஇருக்குங்குறிசொன்னோம்.

(இ-ள்) சூரியனாட்சியில் செவ்வாயுதயமாகில் சிவந்தவஸ் திரம்மாமிசம் சிவந்தபுஷ்பம்வரும் மூன்றுபேர்வருவர் அதில்ஒரு வன்பிராமணன் ஒருவன்சிகப்பு நிறமுள்ளவன் ஒருவன்குள்ளன்மு கத்தில்மறுவிருக்கும் துன்பமான செய்திகளொன்றுமில்லை. எ-று

சொன்னஅருக்கனாட்சியினில் தூதாலுரில்வருமர்மங்கள்
மன்னரோலைவரும்வணிகன்மகிழ்ச்சியுடனேமங்களமாம்
பொன்னனுரிலோகாசுபணம்போதமறையோர்கொடுவருவர்
பின்னுஞ்சுபங்கள்தென்மேற்கில்பிரபலநன்மையறிவாயே.

(இ-ள்)சூரியனாட்சியில் புதன்உதயமாகில் இரகசியமானசமா ச்சாரம்இராசாக்கள்ஓலைவரும் வியாபாரிவருவன் சந்தோஷசமாச் சாரம்கலியாண சமாச்சாரம்வரும் குருஉதயமாகில் பொன்காசுவ ரும்பிராமணன் கொண்டுவந்து கொடுப்பன்தென்மேற்கு திசையி லிருந்துசுபகாரிய சங்கதிவரும் பிரபலநன்மையுண்டாகும். எ-று

Digitized By Roja Muthiah Research Library

அரியசுங்கனுரில்வெள்ளையாடைப்பூகண்ணில்காவி
கரியசனிவந்துரில்காணிகன்னிவழக்காமாள்வரத்து
தெரிவாய்குள்ளன்கருப்பனராசேரில்மன்னர்சாவோலை
குறியாங்கருப்புமுடைநிறமுங்கொண்டோன்தாழ்ந்தகுலனாமே.

(இ-ள்) சூரியனாட்சியில் சுக்கிரனுதயமாகில் வெள்ளைவஸ்திரம்வெள்ளைப் புஷ்பம்நாற்கால் மிருகம்வரும் கண்ணூனமாயிருக்கும்சனிஉதயமாகில் பூமிவழக்குபெண்வழக்கு ஆள்வரும்வருகிறவனில்ஒருவன் குள்ளன்மற்றவன் கருப்பனாயிருப்பன் கேதுஉதயமாகில்ராசாக்கள்ஓலை சாவோலைவரும்கொண்டு வருகிறவன்கீழ்சாதிகறுப்பன்அவன் உடைக்குகறுப்புக்குறி போட்டிருக்கும். எ-று

சந்திரன் ஆரூடபலன்.

ஆமேசோமனாட்சியினிலலவனுரில் தூதாள்மக்கள்
தாமேவருவர்கவிவல்லோர்தன்சேயுரில்காய்கனிகிழங்கு
போமேபூங்கொத்துடனுறவோர்பொன்றருவாராம்புதனுரிலோ
பூமேலழகிவல்லியர்க்கும்புதல்வர்பெருதல்நல்மொழியே.

(இ-ள்) சந்திரனாட்சியில் சந்திரனுதயமாகில் தூதாள்வரும் புத்திரன்வருவான் வித்துவான்வருவான் செவ்வாயுதயமாகில்காய்பழம்கிளங்கு புஷ்பக்கொத்துவரும் உறவின்முறையார் பொன்தருவார்கள்புதனுதையமாகில் பிள்ளைப்பேறு நல்லவார்த்தை உண்டாகும். (எ-று) (௩௩)

மொழியேமறையோனுரில்மோகமின்னாள்வருவள்பொன்றருவள்
பழியேலங்கசுகமுறவோர்பரியசாவாஞ்சுங்கனுரில்
தொழியேதூயபூவுங்காய்துடரும்பொன்னோடாடையும்சேல்
விழியேகாரியுரில்பரிகோவழங்கும்பறவைவியாபாரி.

(இ-ள்) சேல்போன்ற கண்களையுடையவளே கேட்பாயாக்சந்திரனாட்சியில் குருஉதையமாகில் இன்பநாயகிவருவள்அவளால் திரவியம்வந்துசேரும் திரேக்சுகமுண்டாகும் உறவில்பெரியசாவுநேரிடும்சுக்கிரன் உதையமாகில் வெள்ளைப்புஷ்பம் காய்கனிகிழங்குதிரவியம் வஸ்திரம்வரும் சனிஉதயமாகில் குதிரை பசுபக்ஷி ஓர்வியாபாரி கொண்டுவந்து கொடுப்பன். (எ-று) (௩௪)

பாரிமதியினாட்சியினில்பாம்புவரிற்றீவோலைவருஞ்
சோரபயமுங்கலகமுண்டாந்துலங்கியிரவியதனிலுரில்
வீரனிருபனோலைவரும்விசேடலாபமில்லையவர்
பேருந்நிறமுமவர்வடிவும்பிறப்புந்திசைகண்டுரைப்பாயே.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்) சந்திராட்சியில் பாம்பு உதயமாகில், துயரமான சமாச்சார ஓலை வரும் கள்ளர்பயமுண்டாகும் கலகமுண்டாகும் சூரியனுதயமாகில் இராசாக்கள் ஓலைவரும் விசேஷ இலாபமில்லை இவ்விதங் கோடுகள் உதித்திருக்கும் நிலையறிந்து சாதியும் நிறமும் வடிவும் திசையும் கண்டு பலன் சொல்வாய். (எ-று) (௫௫)

செவ்வாய் ஆரூடபலன்.

உரைக்குஞ் செவ்வாயாட்சியினி னூரிலோ சேய்நாற் காலி வரும்
பெருந்தகஞ் சும்பிணக்காகும் பேனும் புதனூரில் பெண்காலி
திறக்கக் குருஉரில் சிவந்த உடை சிலந்திபுண் புரைகுத்துப்பழி
நிறக்கச் சுங்கனூரில் முப்பூநிகழ் முக்கனியும் மழையொட்டும்.

(இ-ள்) செவ்வாயாட்சியில் செவ்வாய் உதயமாகில் நாற்கால் மிருகம் வரும் விஷ வார்த்தை பிணக்குச் சண்டையுண்டாகும் புதன் உதயமாகில் பெண் வரும், நாற்கால் மிருகம் வரும் குருஉதயமாகில் சிகப்பு வஸ்திரம் வரும் சிலந்திபுண் புரை நேரிடும் வெட்டுக்குத்துப்பழி உண்டாகும் சுக்கிரன் உதயமாகில் மூன்று விதப்புஷ்பம் மூன்றுவித காய்கனிவரும் மழை உண்டாகும். (எ-று) (௫௬)

ஒட்டக்காரியுரில் கைகாலுடனே தளையும் பகையுண்டாங்
கெட்ட அரவுவரில் கேடாங்கிளரும் விஷத்தால் வியாதியினால்
வட்டக்கதிருரில் மீனிறைச்சி வருமே மதுவும் பாற்குடங்கள்
முட்ட மதியமுரில் மருமமின்னாள் தருவள் பொன்பூவே.

(இ-ள்) செவ்வாய் ஆட்சியில் சனிஉதயமாகில் கால்விலங்கு கைவிலங்கு வரும் பகையுண்டாகும் பாம்பு உதயமாகில் விஷத்தினாலாவது வியாதியினாலாவது உண்டான தீங்கு வார்த்தை வரும் சூரியன்உதயமாகில் மீன் இறைச்சிகள் சாராயம் பாற்குடங்கள் வரும் சந்திரன் உதயமாகில் கள்ளவைப்புள்ள ரகசியப்பெண் பொன் புஷ்பம் கொண்டுவந்து தருவள். (எ-று) (௫௭)

புதன் ஆரூடபலன்.

பூவார்புந்தியதிற் புந்திபுகலக் கவிஞன் விருந்துகுரு
மாவாரமுமன்னுவல் புகர் மன்றா துடன்காய்கனி புளிமற்
றேவாரமுதஞ் சனியுரில் மாதெற்றும் காலி அரவரிலோ
சாவார் மீசர் நஞ்சுகவிதங்கும் பீடையெனல் வேண்டும்.

(இ-ள்) புதனாட்சியில் புதன்உதயமாகில் வித்துவான் வருவனநல்ல விருந்து வரும் குருஉதயமாகில் பெருமை பொருந்திய ஆபரணங்களை ராசசந்நிதானம் வரும் சுக்கிரன்உதயமாகில் ராசாக்

களிடத்திலிருந்து ஆள்வரும் இனிப்பும் புளிப்புமான காய்கறிப தார்த்தம்வரும் தேவஅமிர்தத்திற்குச்சமானமாகிய பண்டுபலாதி வரும்சனிஉதயமாகில் பெண்வரும் நாற்கால்மிருகம்வரும் பாம்பு உதயமாகில் நீசச்சாவுநஞ்சாலும் வியாதியாலும் உண்டானபிடை சமாச்சாரம்உண்டாகும். (எ-று) (௩௮)

வேண்டுமெருக்கனுரிற்றலைவர்வேந்தர்பயமுமக்கினிபயம்
மீண்டுமதியமதனிலுரில்மின்னாள்வெள்ளைப்பூவுடையும்
நீண்டுவருமேநற்சுகந்தம்நிற்கில்செவ்வாய்வித்தைதமணம்
பூண்டமொழியேவருஞ்சுக்கிர்தம்புக்கில்வேன்மறையோர்வரவாகும்.

(இ-ள்) புதன்ஆட்சியில் சூரியன்உதயமாகில் தலைமையான வர்கள்விரோதம் வேந்தர்விரோதம் காவல்வரும் அக்கினிபயம் உண்டாகும்சந்திரன் உதயமாகில்பெண் வெள்ளைப்புஷ்பம்வெ ள்ளைவஸ்திரம் நல்லசுகந்த பரிமளம்வரும் செவ்வாய்உதயமாகில் நல்லவித்தைவரும் கல்யாணசமாச்சாரம்வரும் சுகிர்தமுண்டாகும் பிராமணாள்வருவார்கள். (எ-று) (௩௯)

குரு ஆரூடபலன்.

ஆகுமரசனாட்சியினிலரசனுரில்பெண்வரவுபிறர்
மோகங்கீர்த்திமுளைபிறக்குமுன்னிற்சுக்கனுரிலேக
போகங்கரிகாய்பூவிக்குபோதமறையோர்கொணர்ந்துதரும்
பாகுமொழியாய்பகர்சனிக்குப்பணங்காசடிமைவரவுடைத்தே.

(இ-ள்) குருஆட்சியில் குருஉதயமாகில் பெண்வரவு பிறர் மோகம் கீர்த்திபிரதாபம் புத்திஉற்பத்தி உண்டாகும்சுக்கிரனு தயமாகில் ஏகபோகம் உண்டாகும் காய்கறிபுஷ்பம் கரும்புபிராம ணாள்கொண்டு வந்து தருவார்கள் சனிஉதயமாகில் ஆளடிமைபண ங்காசுவரவுண்டாகும் கற்கண்டிலுமினிமையாகிய சொல்லையுடை யவளே. (எ-று) (௪௰)

உடைத்தவுரகனுரில்பூந்தாருடனேவிடமுஞ்சேர்ந்துவரும்
தொடுத்தமன்காயுறவிற்சாசொல்லுமிரவிநல்வசனம்
அடுத்தஉறவோர்சான்றோர்பூவரசரோலைவரும்மதியால்
தடத்தார்பூவைந்தமுலையணங்கேதயிர்பால்தேன்பொன்தேவிவரும்

(இ-ள்) குருஆட்சியில் பாம்புஉதயமாகில் பூமாலைவிஷத்துட னேகலந்துவரும் ராசகோபம்உண்டாகும் உறவினரில்சாவுசொல் லும் சூரியன்உதயமாகில் பிரியமான[illegible]த்தை உறவின்முறையா ர்பெரியோர் புஷ்பம்வரும் ராசாக்களோலைவரும் சந்திரன்உதயமா

கில்தயிர்பால் நெய்பொன்பெண் முதலானவைவரும் பூமாலையை த்தரித்தபெண்ணே கேட்பாயாக. (எ-று) (௬௪)

வருமேசேயுரில்மக்களினுல்வருந்துமனமும்மனையோரால்
உறமாம்வார்த்தைவரும்புந்தியுரிலோகள்ளநாயகியாள்
வருவாளேசுகந்தருகவுழங்கும்பங்காய்கரிபூ
தருவள்வணிகன்வருமோலைதப்பாதென்றுசெப்பிவொய்

(இ-ள்) குருஆட்சியில் செவ்வாயுதயமாகில் மக்களினுலும் மனையோராலும் மனவருத்தமுண்டாகும் புதனுதயமாகில் வார்த்தைவரும் கள்ளநாயகிவந்து சுகந்தருவள் மிட்டாய் காய்கறிபணியாரம் சுகந்தபரிமள்புஷ்பம் கொணர்ந்துதருவள்வியாபாரி வருவன்நல்ல சமாச்சாரம்வரும் இதுதப்பாதென்று சொல்வாய்.

சுக்கிரன் ஆரூடபலன்.

செப்பும்புகராட்சியில்வெள்ளிசேரில்முக்கனிகிழங்குவரும்
தப்பாக்காரியுரில்பிரதேசத்துவிஷயம்நல்வார்த்தை
ஒப்பாரவமுரில்தலைசுட்டோலைவருமன்னபவோலை
செப்பாரிவியுரில்மன்னர்சேனைமுறிந்தசெய்திவரும்.

(இ-ள்) சுக்கிரனாட்சியில் சுக்கிரனுதயமாகில் முக்கனிகாய்கிழங்குவரும் சனிஉதயமாகில் பிரதேசத்து வார்த்தைவரும் நல்லவிசேஷமுண்டாகும் பாம்புஉதயமாகில் கண்டசுட்ட சாவோலைவரும்அபகாரியமான ராசகாரிய ஓலைவரும் சூரியனுதயமாகில் இராசபடைமுறிந்த விசேஷம்வரும். (எ-று) (௬௫)

வருமேமதியமுரில்மழையும்வல்லஉறவோர்சங்காத்தம்
திறமேசெவ்வாயுரில்தயிர்பால்சிவக்கப்பொரித்தஅவல்மதுரம்
உறமேபுந்தியுரில்புணர்ச்சியுண்டாஞ்சுகந்தமுறில்குருவோ
காமேல்கிடைக்கும்பொன்புனுகுகலவைச்சாந்துபணிவருமே.

(இ-ள்) சுக்கிரனாட்சியில் சந்திரன்உதயமாகில் மழைவரும்உறவினரில்புது உறவுண்டாகும் செவ்வாய்உதயமாகில் தயிர்பால் சிவக்கப்பொரித்த் அவல்மதுரமாகிய வஸ்துக்கள்வரும்புதன்உதயமாகில்நல்ல கன்னிகைகளின் புணர்ச்சிஉண்டாகும் சுகந்தபரிமளவஸ்துக்கள்வரும் குருஉதயமாகில் பொன்புனுகு கலவைச்சாந்து விநோதமான ஆடையாபரணங்கள் கைபல்லுக்க் கிடைக்கும்.

சனி ஆரூடபலன்.

வருமேகாரிதனிற்காரிவரிலோபிணக்குசிலுகுஅரா

தருமேமாற்றார்தீவார்த்தைதரணியுரிற்காய்தயிரவனுந்
திறமேமதியமுரிற்கரும்புதேனும்பாலும்பழமுஞ்சே
யுருமேயாகிற்றுன்பங்களுரைக்குஞ்சிலரைத்தளைத்ததென.

(இ-ள்) சனிஆட்சியில் சனி உதயமாகில் பிணக்குச்சண்டை துன்பும்வரும் பாம்புஉதயமாகில் பங்காளிகளால் கெட்டவார்த்தைவரும் சூரியன்உதயமாகில் மதுரமானகாய்கறி கிழங்குதயிர் பால்நெய் அவல்முதலான பண்டங்கள்வரும் சந்திரன்உதயமாகில் கரும்புதேன் பால்பழம்வரும் செவ்வாயுதயமாகில் துன்பச்செய்திசிலபேரை விலங்கில்போட்ட செய்திவரும். (எ-று) (சரு)

தழைக்கும்புந்தியுரிற்பறவைசாரும்போகம்நற்பெண்ணால்
விளைக்குங்குருவில்நாற்காலிவிஞ்ஞானம்புதியபொருள்
இழைக்கும்வெள்ளியுரில்மன்னர்எத்தனைசண்டைவித்வசனர்
கழைக்கூத்தாட்டரணபேரிகையுங்காதிற்கேட்குங்கண்டுரையே.

(இ-ள்) சனிஆட்சியில் புதன்உதயமாகில் பறவைவரும் நல்ல பெண்போகம் வந்தெய்தும் குருஉதயமாகில் நாற்கால்மிருகம்வரும்விஞ்ஞானம்வரும் நூதனபொருள்வரும் சுக்கிரன்உதயமாகில் ராசாக்கள்சண்டையுண்டாகும் வித்வான்கள்வருவார்கள் கழைக்கூத்துநடக்கும் ரணபேரிகைசப்தம் காதில்கேட்கும் என்றிந்தப்பலனைத்தெரிந்துசொல்வாய். (எ-று) (சசா)

கேது ஆருடபலன்.

உரகனுட்சிதனிலுரகனுரிலோவிஷத்தாற்சாவுசொலும்
பருதியுரிலோபடைவரத்துபரியசாவாம்பிறையுரிலோ
தருமேவல்லசிறையுஞ்சாதனிற்குருதியுரிற்புந்தி
யுருமேவிருந்துவரும்குருவேயுரிலோநன்மைமிகச்சிறக்கும்.

(இ-ள்) கேதுஆட்சியில் கேதுஉதயமாகில் விஷந்தீண்டிச்செத்தசெய்திவரும் சூரியன்உதயமாகில் படைவரும் சந்திரன்உதயமாகில்பெரிய சாவோலைவரும் செவ்வாய்உதயமாகில் கடினசிறை விலங்குவரும்சாவோலைவரும்புதன்உதயமாகில் விருந்துவரும்குரு உதயமாகில்சிறப்புப்பொருந்தியமிகுந்த நன்மைஉண்டாகும் எ-று

சிறக்கும்வெள்ளியுரிற்கள்வுந்தீயசாவுமாள்வரவு
நிறக்கும்மன்னபவோலைவரும்நீலனுரிலோபயணமொழி
பிறக்கும்நல்லச்சபலன்கள்மேடையயிலேநீயுமிதைத்
தாக்கும்படியேயாவர்க்குஞ்சொல்வாய்பார்மயிலேவளிவிட்டே

(இ-ள்) கேதுஆட்சியில் சுக்கிரனுதயமாகில் களவுகெட்டசாவு ஆள்வரவுஇராசாக்களால் கெடுதியானஓலைவரும் சனிஉதயமாகில் பயணவார்த்தைநபிறக்கும்நல்லசுபபலன்கள்உண்டாகும்பேடைம யில்போன்ற சாயலையுடையபெண்ணே நீயும்உலகத்தாரறியும்பொ ருட்டுவெளிப்படையாய்த்தெரிவிக்கும்படி உனக்குச்சொன்னேன்

கெவுளிசொல் விபரம்.

விட்டகெவுளிகுரலொன்றும்விண்டஇரண்டுக்தனலாபம்
வட்டமஞ்சுமிருநிதியம்வருமேநான்குகால்நடைகள்
எட்டுமாறுமாகாதுஎண்ணிலேழிலாள்வரத்து
சட்டப்பல்லிகுரல்மூன்றுஞ்சாவுண்டென்றுசொல்மாதே.

(இ-ள்) கெவுளிசொல்லுங்குரலோசையானது ஒன்றுஇரண் டாகில்தன லாபமுண்டாகும் ஐந்தாகில்பொன்பூஷணம் பணம்ஆ டைமுதலான பண்டங்கள்வரும் நான்காகில்நாற்கால் மிருகமுதலி யசீவஜெந்துக்கள்வரும்எட்டும் ஆறும்நல்லபலனல்ல அசுபபலன் உண்டாகும் ஏழாகில் ஆள்வரவு உண்டாகும் மூன்றாகில்சாவுஉண் டென்று சொல்வாய்பெண்ணே. (எ-று) (சசு)

பூமிக்காதல் பலன்.

மாதேகேள்நிலத்திற்கெவுளிமன்னுங்கால்தினவட்டத்தில்
சாதகருறினும்பாம்புசாரினும்பலன்கள்நன்றாம்
தீநகருறினும்பாம்புசேரினும்பாம்பால்ச்சஞ்
தூதோலைதீச்சொல்துன்பம் துடர்வழக்கிடருமாதல்

(இ-ள்) பூமியில்கெவுளி சொன்னகாலத்தில் தினச்சக்கரவட் டத்தில்ஷேத்திரத்தில் சுபக்கிரகம்தனித்திருந்தாலும் இராகுசேர்ந் திருந்தாலும்நல்லபலனை உண்டாக்கும் ஷேத்திரத்தில்நீச்கோள்நின் றிருந்தாலும்இராகு சேர்ந்திருந்தாலும்பாம்பினால் பயம்துயரமான தூதோலைவரும் துன்பம்சண்டைசச்சரவு இடர்கள்உண்டாகும்.

உச்சிக்கெவுளி பலன்.

ஆதவன்புதனேமாரியருந்திங்கள்செவ்வாயில்லை
ஓதும்பொன்காரியாரியுறும்புகர்சிலுகுதூரல்
மீதுச்சிவிள்ளுங்கெவுளிமேற்சொன்னபடியேகோட்கள்
தீதறக்கண்டுதேர்ந்துதிருத்தமாய்ப்பலன்களோதே.

(இ-ள்) ஞாயிற்றுக்கிழமை புதன்கிழமை இதில் கெவுளிஉச் சியில்சொன்னால் மழையுண்டுதிங்கள் செவ்வாய் இதில் சொன்ன

ல்மழை இல்லை வியாழம்சனிஇதில் சொன்னால்பெருத்தமழையுண்டாகும்வெள்ளிக்கிழமை சொன்னால்நச்சுத்தூரல் உண்டாகும்தவிறஆகாயத்தில் சொல்லுங்கெவுளிக்கு மேற்சொன்னபடி கிரகம்நிற்கும்நிலையை அறிந்துநன்மை அல்லதுதீமையான பலன்களைதிருத்தமாய்ச்சொல்வாய். (எ-று) (ருக)

கெவுளி சாதிநிறம் அறியும்படி.

ஓதற்கரியகரும்பல்லிஉற்றகூட்டிலுறும்பல்லி
வாதப்பல்லிமுடப்பல்லிவார்த்தைதள்ளிப்பின்சொல்லுஞ்
சீதக்கெவுளிசெறுமாத்தில்சிறந்தமனையில்மனைச்சுவற்றில்
போதமனையின்கூரைதனில்புகன்றமொழிகள்தான்பொருந்தும்.

(இ-ள்) சொல்லுதற்கரிய பெருமையையுடையவளே கேட்பாயாகமுதுகில் கீற்றில்லாதகருப்பு நிறமுள்ளபல்லி சொல்வதையும்இரண்டுகெவுளி சேர்ந்துகூண்டில் இருக்குங்கால் சொல்வதையும்ஒன்றோடொன்று சண்டையிடுங்கால்சொல்வதையும்காட்டுப்பல்லிசொல்வதையும் இவ்விதபல்லியின் காதல்களைநீக்கிபின்சொல்லப்பட்டிருக்கும் அடையாளங்களுள்ள கெவுளியானது போர்க்களம்அல்லது வயல்மரம்வீடு வீட்டுச்சுவர்வீட்டின் கூரை இதுகளில்சொல்லும் வார்த்தைகளை மாத்திரம் உட்கொள்வாய் பெண்ணே. (எ-று) (ருஉ)

பொருந்துங்கதிரோன்வாரமதிற்புகலுங்கெவுளிபெண்ணோடு
அருந்தியிருக்குமுணதுவுமருமுதுகிலொருகீற்று
திருந்தும்வெள்ளைநிறம்பொன்னாந்திகழுஞ்சாதிபிரம்மகுலம்
அறிந்தேயுரைப்பாய்பல்லியதுவாணும்பலன்கள்தெளிவாக.

(இ-ள்) ஞாயிற்றுக்கிழமைய தினம் சொல்லுங்கெவுளியானதுபெண்ணோடுசேர்ந்து ஆகாரம்கொண்டிருக்கும் முதுகில்ஒருகீற்றுவெண்மைநிறமாக இருக்கும்அதின் தேகமுழுதும் பொன்னிறமாயிருக்கும் அதுபிரம்மசாதி ஆண்பல்லி இவ்விதம் இருக்கும் பல்லியின்கூறைத்தெரிந்து அன்றையதினம்சொல்லும் ஆண்பல்லியின்காதலுக்குமாத்திரம் தெளிவாய்பலன்கண்டுசொல்வாய் எ-று

ஆகுஞ்சோமவாரமதிலடருங்கெவுளிபெண்ணாகுஞ்
சோகம்மிகுந்துஆணோடுந்தான்றும்முதுகில்கீற்றொருபா
ஆகுஞ்சாதிஅரசகுலமமரும்பளிங்குநிறமாகும்
பாகமமர்ந்தபசுங்கிளியேபகர்வாயறிந்துபல்லியின்கூர்.

(இ-ள்) திங்கட்கிழமைய தினஞ்சொல்லுங் கெவுளியானது

பெண்கெவுளி, அது ஆணோடு ஆங்காரங்கொண்டு விசனமாய்பிரிந்திருக்கும்பொழுதுகில் 10-கிற்றிருக்கும் க்ஷத்திரியசாதிவெண்மைநிறம்இடப்பாகமமர்ந்த தக்கை கபோன்றமொழியாளே இவ்விதமிருக்கும்பல்லியின்கூரைத்தெரிந்து அன்றைய பலனைச் சொல்வாய்.

கூடுஞ்செவ்வாய்நாளதனிற்குறிக்குங்கெவுளியாணுகத்
தேடுஞ்சாம்பல்நிறமுதுகிற்றிகழுங்கிரலெட்டதுவாய்ச்
சூடுஞ்சாதிவைசியனுந்தனித்தேயிருக்குமையமிலை
நேடும்பலன்கள்பல்லியின்கூர்நெறியையறிந்துநிகழ்த்திடுவாய்.

(இ-ள்)செவ்வாய்க்கிழமையதினம்சொல்லுங்கெவுளியானது ஆண்கெவுளி சாம்பல்நிறம்முதுகில் 8-கிற்றிருக்கும் வைசியசாதி ஒண்டியாயிருக்கும் இவ்விதமிருக்கும்பல்லியின் கூரைத்தெரிந்து சந்தேகமில்லாமல் அன்றையபலனைச்சொல்வாய். (எ-று) (ருஙி)

நிகழும்புந்திவாரமதில்நிற்குங்கெவுளிபெண்ணுகும்
மகிழுமாணோடதுவுஞ்சூல்மன்னும்முதுகில்மிகக்கிரல்
திகழும்நிறம்மாபொன்னகுஞ்சிறக்குஞ்சாதிசூத்திரனும்
புகழும்பலன்கள்பல்லியின்கூர்பொலிவாயறிந்துபுகன்றிடுவாய்.

(இ-ள்) புதன்கிழமையதினம் சொல்லுங்கெவுளியானது பெண்கெவுளிஆணோடு மகிழ்ச்சியாயிருக்கும் கெற்பமாயிருக்கும்முதுகில் அதிககிரலுண்டாயிருக்கும் பொன்னிறம் சூத்திரசாதிஇவ்விதமிருக்கும் பல்லியின் கூரைத்தெரிந்து அன்றைய பலனைச்சொல்வாய்பெண்ணே. (எ-று) (ருசு)

புகலப்பொன்னேன்வாரமதிற்பொருந்துங்கெவுளியாணுகு
மகலச்சகியுமிருக்கும்நிறமாகும்நீலமுதுகில்மறு
புகலக்கிடையாதேமொழியும்பொலிவாயிலங்குமாசகுல
முகிலைப்பழித்தகருங்குழலாய்மொழிவாய்கண்டமுறைப்படியே.

(இ-ள்) வியாழக்கிழமைய தினம்சொல்லுங் கெவுளியானது ஆண்கெவுளி பெண்கெவுளியானதுஎட்ட நிற்கும்நீலநிறம்முதுகில்அடையாளமொழிந்திருக்கும் க்ஷத்திரியசாதி மேகத்தைப்பழித்தகரிய கூந்தலையுடையவளே முறைப்படியே இவ்விதமிருக்கும் பல்லியின் கூரைத்தெரிந்துஅன்றைய பலனைச்சொல்வாய் பெண்ணே. (எ-று) (ருஎ)

முறையேவெள்ளியெனும்நாளில்மொழியுங்கெவுளியாண்பெண்
குறியேசாதிபிரம்மகுலங்குறிக்குமுதுகில்வடுவாறு [ணும்
மிறையேசந்திரகாந்தநிறமிலங்குமிதனுமொதுசொலினும்

Digitized By Roja Muthiah Research Library

பிறைபைப்பழித்தநுதலாளேபேணுய்பலனின்னூல்விதியே

(இ-ள்) வெள்ளிக்கிழமையதினம் சொல்லுங்கெவுளியானது ஆணும்பெண்பிரம்மகுலம் முதுகில் ஆறுகீற்றிருக்கும் சந்திரபிம்பத்தைப்போன்ற நிறமாயிருக்கும்மூன்றும் பிறைபைப்பழித்தபுருவத்தை யுடையவளே இந்நூலின்விதிப்படியே இவ்விதமிருக்கும்பல்லியின்கூறைத்தெரிந்து ஷ பல்லிகளிரண்டிலொன்றில் எதுசொன்னபோதிலும்அன்றைய தினப்பலனைச்சொல்வாய்பெண்ணே எ-று

விதிக்குமந்தன்வாரமதில்விளங்குங்கெவுளிபெண்ணாகும்
பதிக்குமன்பாயிருக்கும்நிறம்பகருங்கருப்புமுதுகில்வடு
நிதிக்குநிகராய்ப்பலகீரல்நிகழுஞ்சாதிதாழ்குலமாந் [ம்
துதிக்குமயிலேபல்லியின்கூறுதெரிந்துசொன்னாற்பலன்பொருந்து

(இ-ள்) சனிக்கிழமையதினம் சொல்லுங்கெவுளியானது பெண்கெவுளிஅது ஆண்கெவுளியுடன் பட்சமாயிருக்கும்கருப்புநிறம் முதுகில் பொன்னிறமாய் பலகீறலும்வடுவுமிருக்கும் தாழ்ந்தசாதியாவரும் துதிக்கும்படியான பெண்ணேஇவ்விதமிருக்கும் பல்லியின் கூறைத்தெரிந்து சொன்னால் அந்தப்பலன் பொருந்தும் (எ-று) ருசு

(முதற்பாகம் முற்றிற்று)

இரண்டாம் பாகம்.

கெவுளி பொதுப்பலன்.

பொருந்தமற்றோர்தினபலன்கள்பொதுவாயெட்டுத்திசையுடனே
வுரைந்தமண்விண்நாளேழுக்கடைவாய்ச்சொன்னநற்பல்லி
திருந்தச்சொல்லுங்காதல்பலன்தெளிவாயுரைப்பேன்கண்டறிநீ
பரந்தேயடர்ந்தசிகையதனிற்பகருங்கிழங்குமணத்தாளே.

(இ-ள்) எட்டுத்திக்குகளுடன் பூமி ஆகாயம்கூடிய இதுகளில் நாள்ஏழுக்கும் மேற்சொன்ன நல்லகெவுளியானது பொதுவாக உரைக்குந்தினபலனை நீதெளிவாய்க்கண்டறியும் பொருட்டுப்பிரித்துச்சொல்வேன் சந்தனவாசந்திமிரும் நீண்டடர்ந்த கூந்தலையுடைய பெண்ணே. (எ-று) (கூ0)

ஞாயிற்றுக்கிழமை கெவுளிசொல்லுக்குப்பலன்.

கிழக்கதுசொல்லிலச்சங்கேடுண்டாங்தென்கிழக்குத்
தழைக்குநற்சுகந்துபந்துதரிசனந்தென்மேற்காகும்
வழக்குமேற்றனிலாபவஸ்திரம்வடமேற்காகு
மிழைக்குமிலாபம்பொன்னுமேற்றிழைவடக்குத்தானே.

(இ-ள்) கிழக்கில்கெவுளி சொன்னால்பயம், தென்கிழக்கில் கெடுதிதெற்கில் அன்புவார்த்தை தென்மேற்கில் பந்துதரிசனம் மேற்கில்சச்சரவு வடமேற்கில்வஸ்திரலாபம் வடக்கில்தனலாபம் உண்டாகும்பெண்ணே. [எ-று] (௬௧)

தான்வடகிழக்கிலாபந்தக்கவிண்ஜெயமுண்டாகு
மான்றகாரியங்களாகாவம்புவிதன்னிற்சொன்னற்
றேன்றுளித்தாராயிந்தத்திசையினுக்கருக்கனாளிற்
கின்றிடும்பலன்களீதேவந்திழையாளேகேளாய்

(இ-ள்) வடகிழக்கில் கெவுளிசொன்னால் இலாபம் ஆகாயத்தில்ஜெயம் பூமியில்நினைத்த காரியம்கைகூடாது மேற்சொன்னதிசைகளில் ஞாயிற்றுக்கிழமையதினம் சொல்லுங்கெவுளிக்கு இந்தப்பலன்கள்பொருந்தும் தேன்றுளிக்கும்மாலையையணிந்த பெண்ணேகேட்பாய். [எ-று] (௬௨)

திங்கட்கிழமை கெவுளி சொல்லுக்குப்பலன்.

கேள்தனலாபங்கிழக்கிடாகுந்தென்கிழக்கு
நீள்பகைதெற்குகோபம்நீண்டவிரோதந்தென்மேற்
கோள்வருமேற்குப்பேட்டிகோவேந்தர்தயவுண்டாகு
மாளமங்கலமாமோலைமன்னிடும்வடமேற்காமே.

(இ-ள்) கிழக்கில்கெவுளி சொன்னால்தனலாபம் தென்கிழக்கில்இடர்நேரிடும் தெற்கில்தீராப்பகை கோபச்செய்திதென்மேற்கில்நீண்டவிரோதம் கோள்வார்த்தைமேற்கில் இராஜபேட்டிஇராஜதயவுவடமேற்கில் அமங்களமான சாவோலைவரும் (எ-று) ௬௩

ஆம்வடதிசைக்காமாடையாதாயஞ்செல்வந்தங்கு
மாம்கலியாணவார்த்தைநயடருஞ்பொன்வடகிழக்குந்
தாம்வருங்கேடாகாயந்தங்குமைசுவரியம்பூமி
யாம்சொன்னேமதியினாளிலமர்பலனதிகமாமே.

(இ-ள்) வடக்கில்கெவுளிசொன்னால் வஸ்திரலாபம்செல்வம் வடகிழக்கில்கலியாண வார்த்தைபொன்பூஷணம் ஆகாயத்தில்கேடுபூமியில் ஐசுவரியமுண்டாகும் மேற்சொன்னதிசைகளில் திங்கட்கிழமையதினம் சொல்லும்கெவுளிக்கு இந்தப்பலன்கள்பொருந்தும்என்றுயாம் சொன்னோம். [எ-று] (௬௪)

செவ்வாய்க்கிழமை கெவுளி சொல்லுக்குப்பலன்.

அதிகசம்பத்துகிழக்காகுந்தென்கிழ்திசைக்கு
பதிபந்துலாபந்தெற்குபழிதுக்கந்தென்மேற்குக்கோ

Digitized By Roja Muthiah Research Library

சதிசத்துருவாகுமேற்குச்சார்ந்திடுமனுகூலங்கள்
துதிவடமேற்குதூரதேயத்துசெய்திகாணே.

(இ-ள்) கிழக்கில்கெவுளிசொன்னால் அதிகசம்பத்துதென்கிழக்கில்வீடுபந்துக்களால் லாபம்தெற்கில்பழிச்சொல் துக்கம்தென்மேற்கில்வஞ்சனை சத்துருமேற்கில்அனுகூலம் வடமேற்கில்தூரதேசத்து சமாச்சாரம்வரும் கண்டுகொள்வாய். [எ-று] (௬௫)

காண்வடக்கச்சம்சத்துருகனகதண்டிகையுமுண்டாம்
பூண்பதுவடகிழக்குப்போம்பயணம்விண்பூமி
தோணும்பொன்தனவரத்துத்தொல்லுலகதனில்மிக்கப்
பேணுவாய்சேயின்வாரம்பிறந்ததிப்பலன்கள்மாதே.

(இ-ள்) வடக்கில்கெவுளி சொன்னால்சத்துருபயம்வடகிழக்கில்கனகதண்டிகை வாகனம்வரும் ஆகாயத்தில் பயணம்பூமியில் அதிகதனலாபம் பொன்வரும்மேற்சொன்ன திசைகளில்செவ்வாய்க்கிழமையதினம் சொல்லுங்கெவுளிக்கு இந்தப்பலன்கள்பொருந்தும்இப்பூமியின்கண் பெண்ணே. [எ-று] (௬௬)

புதன்கிழமை கெவுளி சொல்லுக்குப்பலன்.

பலன்சந்தோடங்கிழக்குப்பணலாபந்தென்கிழக்குப்
புலன்பீடைதெற்குதென்மேல்புகல்பந்துஆனியென்றே
சொலும்பயம்பீடைமேற்குசொர்ணங்காரியங்கள்நாச
மிலங்கிடும்வடமேற்குக்குமெல்லியேசொன்னேன்பாராய்.

(இ-ள்) கிழக்கில்கெவுளி சொன்னால்சந்தோஷம் தென்கிழக்கில்திரவியலாபம் தெற்கில்திரேகபீடை தென்மேற்கில் பந்துஆனிமேற்கில் பயம்பீடை வடமேற்கில் தனநாசம் காரியநாசமுண்டாகும் என்றுசொன்னேன் பாராய்பெண்ணே. [எ-று] (௬௭)

பார்சுகமாம்வடக்குப்பகர்ந்தகாரியங்களாகா
நேர்வடகிழாகாயம்நிகழ்ந்திடும்நல்லசெய்தி
தேரயிஸ்வரியமுண்டாந்திகழ்பூமிதன்னில்நாளும்
வார்புனைகொங்கைமாதேவளர்புதன்பலனுந்தேறே.

(இ-ள்) வடக்கில்கெவுளி சொன்னால்சுகம்வட கிழக்கில்நினைத்தகாரியங்களாகாது ஆகாயத்தில்நல்ல சங்கதிவரும் பூமியில்ஐசுவரியமுண்டாம் கச்சணிந்தகொங்கைகளையுடைய பெண்ணேமேற்சொன்ன திசையில்புதன்கிழமைய தினம்சொல்லுங் கெவுளிக்கு இந்தப்பலன் பொருந்தும். [எ-று] (௬அ)

Digitized By Roja Muthiah Research Library

வியாழக்கிழமை கெவுளிசொல்லுக்குப் பலன்.

தோசுபங்கிழக்குத்தென்கிழக்குக்கோபந்து
நேருஞ்சன்மானந்தெற்குநீண்டிடுந்தனலாபங்கள்
சேருந்தென்மேற்குகாரியசித்தியாம்மேற்குநஷ்டம்
ஓரேநீவடமேற்குக்குஉகந்திடும்நல்லசொல்லே.

(இ-ள்) கிழக்கில்கெவுளி சொன்னால்அசுபம் தென்கிழக்கில் பந்துசன்மானம் தெற்கில்தனலாபம் தென்மேற்கில் காரியசித்தி மேற்கில்நஷ்டம் வடமேற்கில்நல்லவார்த்தை உண்டாகும் [எ-று]

சொல்வடக்கதனில்தானுந்தொடுத்திட்டகாரியமாகா
எல்லையாம்வடகிழக்கோ இன்பபோசனமுண்டாகும்
வல்லிகேள்கலகம்விண்ணேவரும்பூமியலைச்சல்மெத்தத்
தொல்லையாங்குறுவின்வாரந்தொகுத்திட்டபலனிதாமே.

(இ-ள்) வடக்கில்கெவுளி சொன்னால்தொடுத்த காரியமாகாது வடகிழக்கில் இன்பபோசனமுண்டாகும் ஆகாயத்தில் கலகம் பூமியில்அலைச்சல் துன்பமுண்டாகும் மேற்சொன்னதிக்குகளில் வியாழக்கிழமைய தினம்சொல்லுங்கெவுளிக்கு இந்தப்பலன்பொருந்தும்பெண்ணே. [எ-று] (எய)

வெள்ளிக்கிழமை கெவுளிசொல்லுக்குப்பலன்.

ஆம்சுபவார்த்தைகிழக்கலங்காரந்தென்கிழக்குத்
தாம்பந்துசேர்வைதெற்குத்தக்கநற்கேள்விதென்மே
லாமேற்குசந்தோஷங்களடர்ந்திடுங்கலகம்நோயும்
பூம்பொழிலணங்கேகேளாய்புகன்றதுவடமேல்தானே.

(இ-ள்) கிழக்கேகெவுளிசொன்னால் சுபவார்த்தைதென்கிழக்கில்அலங்காரம் தெற்கில்பந்துதரிசனம் தென்மேற்கில் நல்லசமாச்சாரம்மேற்கு சந்தோஷம்வடமேற்கு கலகம்நோய்உண்டாகும்சோலையிலுலாவும் மயில்போன்றபெண்ணே. [எ-று] (எக)

மேலமர்கலகவார்த்தைமீதுறும்வடதிசைக்கு
சாலவேசத்துருவிருத்திதங்கிடும்வடகிழக்கு
சீலமாம்வஸ்துலாபம்சேரும்விண்சூதகங்கள்
மேலுறும்பார்பலன்கள்மிகுந்திடும்வெள்ளிநாளே.

(இ-ள்) வடக்கில்கெவுளிசொன்னால் கலகவார்த்தைவடகிழக்கில்சத்துரு அதிகம்ஆகாயத்தில் வஸ்துலாபம்பூமியில் சூதகஸ்நானம்உண்டாகும் மேற்சொன்னதிக்குகளில் வெள்ளிக்கிழமைய தினம்சொல்லுங்கெவுளிக்கு இந்தபலன்பொருந்தும் [எ-று] எஉ

சனிக்கிழமை கெவுளிசொல் லுக்குப் பலன்.

நாளதிசொல்கிழக்குநவின்றபொன்களபலாபஞ்
சூழுந்தென்கிழக்குதெற்குசுகராஜதெரிசனங்கள்
நீளுந்தென்மேற்குரோகம்நிகர்வஸ்திரலாபம்மேற்கு
நாளும்சம்போகம்நன்மைநவில்வடமேற்கதாமே.

(இ-ள்) கிழக்கேகெவுளி சொன்னால் வெகு வார்த்தைதென் கிழக்கில்திரவியம் களபகஸ்தூரிலாபம் தெற்கில்சுகம் ராஜதெரிசனம்தென்மேற்கில் ரோகம்மேற்கில் வஸ்திரலாபம்வடமேற்கில் ஸ்திரீசம்போகம் நன்மையுண்டாகும். [எ-று] (எக)

ஆம்வடக்கன்புவார்த்தையாகுங்கீழ்வடகீழக்குத்
தாம்வருஞ்சோரதுக்கந்தரும்விண்ணோகாரியஹானி
யாம்காரியசித்திபூமியடரும்நாள்சனிதனக்கே
தாம்வருமிப்பலன்கள்சாற்றினேன்கண்டுதேறே.

(இ-ள்) வடக்கில்கெவுளிசொன்னால் பிரியசமாச்சாரம்வரும் வடகிழக்கில்கள்ளர்பயம் துக்கம்ஆகாயத்தில் காரியஹானிபூமியில் காரியசித்திஆகும் மேற்சொன்னதிக்குகளில் சனிக்கிழமையதின ம்சொல்லுங்கெவுளிக்கு இந்தப்பலன்பொருந்தும் பெண்ணே.

(இரண்டாம்பாகம் முற்றிற்று)

மூன்றாம் பாகம்

கெவுளி பொதுப்பலன்.

கண்டுகொள்வேறோர்மார்க்கங்கழறுவேன்பொதுப்பலன்க
ளெண்டிசைவிண்மண்கெவுளிஇயம்பிடுங்காதலுக்கு
விண்டநாளேழின்கன்னல்விவரித்தேழ்கூறதாக்கிக்
கொண்டதின்விதிகள்பத்துங்கூறுவேன்பலன்தொடுத்தே.

(இ-ள்) எட்டுத்திக்குகளிலும் ஆகாயத்திலும் பூமியிலும்கெ வுளிசொல்லும் பொதுப்பலனைப்பற்றிய வேறொருமார்க்கம்நீதெ ரிந்துகொள்ளும்பொருட்டு நாட்களேழுக்குமுள்ள மொத்தநாழி கையைஏழுகூறாக்கி அதற்குஏற்படுத்தியபொது விதிகள்பத்துக் கும்உண்டாகும்பலனை தொடுத்துக்கூறுவேன் பெண்ணே. [எ-று]

☞ பொதுவிதிகள் 10.

(1) தொடுத்தகருமங்கைகூடாதோன்றுமக்கினிபயஞ்சோர
ரடுத்தபயமுந்தனதானியமாகும்நஷ்டமிவைஎங்கும்.

(இ-ள்) தொடுத்தகாரியம் முடியாது அக்கினிபயம்திருடர்ப யம்தனதானிய நஷ்டமுண்டாகும். [எ-று]

Digitized By Roja Muthiah Research Library

(2) எங்கும்நிந்தைமிகுங்கலகமிலங்குந் துயரஞ்செய்கருமந்
தங்கும்நினைத்தகாரியமுந்தான்கைகூடாதெனச்சொல்லே.

(இ-ள்) எங்கும்நிந்தையும்மிகுந்த கலகமும் துயரமுமுண்டா கும்செய்யுந்தொழிலும் நினைத்தகாரியமும் கைகூடாதெனச்சொல்வாய். [எ-று]

(3) சொல்லற்கரியசந்தோஷந்துலங்குமதலையூர்போனோ
ரல்லலில்லாதேவருவாருகும்நினைத்தகருமமெல்லாம்.

(இ-ள்) சொல்லுதற்கரிதாகிய சந்தோஷமுண்டாகும் ஸ்திரீ பிள்ளையைப்பெறுவள் ஊருக்குப்போயிருந்தவர்கள் துயரமில்லாமல்வருவார்கள்நினைந்த காரியமெல்லாம்முடியும். [எ-று]

(4) எல்லாமேங்கியழும்மரணஏவலுண்டாம்பாம்புமழை
சொல்லாங்கெடுதிஓலைவருந்துயரந்தானேஐயமிலை

(இ-ள்) எல்லாரும்ஏங்கியழும் படியானமரணவார்த்தைவரும்பாம்புமழை கெடுதிவார்த்தை துயரப்படும்படியான ஓலைவரும்

(5) ஐயமில்லைஅயலாரால்ரும்பொன்கிடைக்குஞ்சந்தோஷ
முய்யுமரசரோலையுடன்முற்றுஞ்சுகந்தம்நன்மொழியே.

(இ-ள்) சந்தேகமில்லாமல் அயலாரால்பொருள் கிடைக்கும் சந்தோஷமுண்டாகும் அரசரோலைவரும் சுகந்தபரிமளம் வரும் நன்மைச்சொல்வரும். [எ-று]

(6) நல்லமொழியாமோலைவரும்நண்ணும்மழையாபரணங்கோ
வல்லநாற்கால்ஜெந்துவரும்வழங்குஞ்சுபந்தன்மனைதனிலே

(இ-ள்) நல்லசங்கதியான ஓலைமழைஆபரணம் பசுநாற்கால் மிருகம்வரும்தன்வீட்டில் சுபகாரியம்நடக்கும். [எ-று]

(7) மனையிற்களவுபோனபொருள்மன்னும்பொன்னுபரணம்வரு
தினையத்தளவுஞ்செய்கருமஞ்சிந்தாதடரும்பயமில்லை. [ம்

(இ-ள்) வீட்டில்களவுபோன பொருள்கிடைக்கும் பொன்னுபரணம்வரும் செய்தொழில்கிஞ்சிற்றுவதும் வீணாகாமல்முடியும் பயமில்லை. [எ-று]

(8) இல்லையச்சஞ்சற்றேனுமிலங்கும்மாரிகடும்பகைவன்
வல்லமித்துருவாம்பயணம்வருந்தடையாகுஞ்சுபவார்த்தை

(இ-ள்) கொஞ்சமேனும் பயமில்லை மழையுண்டாகும் பகையாளிசினேகிதனுவன் ஊர்பயணமுண்டாம் தடைபடும் சுபவார்த்தைவரும். [எ-று]

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST - TAMIL NADU

Digitized By Roja Muthiah Research Library

(9) சுபமேமிகுதிஐசுவரியம்தோன்றுமதிகதனலாபம்
அபமே இல்லைகாரியங்கள்அலைச்சல்சற்றேயுண்டாங்காண்.

(இ-ள்) மிகுந்தசுபமுண்டு ஐசுவரியம்அதிகதனலாபம் உண்டாகும் தொடுத்தகாரியங்கள் அபலமில்லைகொஞ்சம் அலைச்சல் உண்டாகும்காண்பாய். [எ-று]

(10) காணும்பயணம்ஜெயம்வஸ்துகனகலாபம்மிகவுண்டாங்
தோணுஞ்சற்றேகலகமதுசொல்வாய்நல்லசுபமாமே.

(இ-ள்) பயணம்வரும்ஜெயம் தனதானியலாபம் அதிகமுண்டாம்கொஞ்சம்கலகம் நேரிடும்நல்லசுபமுண்டாகுமென்றுசொல்வாய். [எ-று]

☞ (பொது விதிகள் 10-த்தும் முற்றிற்று)

ஆமேபொதுவாயுரைத்தபலனும்பத்துநாளேழுந்
தாமேபொருந்துங்கன்னல்தனைத்தகர்ந்தேஏழுகூர்செய்ததனுக்
காமேசொன்னவிதிபத்துமமரும்மாறிஎழுந்திசையும்
போமேதினமுமதின்பலனும்புகல்வேன்மாறும்விதம்பெண்ணே.

(இ-ள்) மேல்பொதுவாயுரைத்த பலன்பத்தும் முறையேநாள்ஏழுக்கும்பொருந்தும் ஷைநாள்ஏழுக்குமுள்ள மொத்தநாழிகையைஏழுகூறாய் பிரித்துஅதனுக்கு மேற்சொன்ன விதிப்பலன்கள் பத்தும்அமர்த்தி பிரதிதினமும்ஷைபலன் மாறிவருந்திசையையும் அதின் பலனையும் அது மாறிவரும் விதத்தையும் விரிவாய்சொல்வாம். [எ-று] (எசு)

சனிக்கிழமை உதயமுதல் மாலை 30-நாழிகைவரை
சொல்லுங்கெவுளியின் பலன்.

பெண்ணேகேளாய்சனிவாரம்பேணுமுதயமுதல்மாலை
நண்ணுங்கன்னலாறைந்துநடக்கும்பலனேபல்லிசொல்லில்
கண்ணேகிழக்குமுதற்பலனும்கருதுமிரண்டோதென்கிழக்கு
மின்னேதெற்குமூன்றாகுமீண்டுந்தென்மேலீரிரண்டாம்.

(இ-ள்) சனிக்கிழமைகாலை உதயம்முதல்சாயரட்சை வரைபகல்நாழிகை 30-க்கும்கெவுளிசொல்லில் அதின்பலன்கிழக்கில்கெவுளிசொன்னால் முதற்பலன்தென்கிழக்கில் இரண்டாம் பலன்தெற்கில்மூன்றாம்பலன் தென்மேற்கில்நான்காம்பலன் இவ்விதபலன்கள்பொருந்தும்பெண்ணே. [எ-று] (எஎ)

ஆமேமேற்குஐந்தாகஅமரும்வடமேலாறதுவே
தாமேவடக்குஏழாகுந்தக்கவடகிழிருநான்காய்ப்
போமேபூமிஒன்பானும்பொருந்தும்விண்ணோரைந்தாம்
யாமேசொன்னோந்தப்பாதென்றறிவாய்மருண்டவிழிமானே.

(இ-ள்) மேற்கில்கெவுளி சொன்னால்ஐந்தாம் பலன்வடமேற்கில்ஆறும்பலன் வடக்கில்ஏழாம்பலன் வடகிழக்கில்எட்டாம்பலன்பூமியில் ஒன்பதாம்பலன்ஆகாயத்தில் பத்தாம்பலன்இவ்விதமாகஇப்பொதுவிதியில் சொன்னபலன்கள்தப்பாமற் பொருந்தும்என்பதாகயாம்சொன்னோம் மிரண்டவிழியையுடைய மான்போன்றபெண்ணே தெரிந்துகொள்வாய். [எ-று] (௭௮)

சனிக்கிழமை மாலைமுதல் ஞாயிற்றுக்கிழமை மாலைவரை
60-நாழிகையின் பலன்.

மானேசனியின்மாலைமுதல்மன்னுங்கதிரோன்மாலைவரை
யானகன்னல்மூவிருபத்தாகும்பலன்கள்கெவுளிசொலில்
கோனேகிழக்குஏழாகுங்கொள்வாய்தென்கிழெட்டாகத்
தேனேதெற்குஒன்றாகத்தெவிட்டாதென்மேலிரண்டாகும்.

(இ-ள்) சனிக்கிழமை மாலைமுதல் ஞாயிற்றுக்கிழமை மாலைவரைநாழிகை 60-க்கும்கெவுளி சொல்லில்அதின் பலன்கிழக்கில்கெவுளிசொன்னால் ஏழாம்பலன்தென்கிழக்கில் எட்டாம்பலன்தெற்கில்முதற்பலன் தென்மேற்கில்இரண்டாம்பலன் இவ்விதபலன்கள்பொருந்தும் பெண்ணே. [எ-று] (௭௯)

ஆகும்மேற்குமூன்றதுவாயமரும்வடமேல்நான்காகப்
போகும்வடக்குஐந்தாகும்பொலிவாய்வடகீழாறதுவா
யேகும்பூமிஈரைந்துஇயல்பாய்விண்ணோஒன்பானும்
வாகுமிகுந்தவடிவாளேவழங்குந்தோகைமயிலனையே.

(இ-ள்) மேற்கில்கெவுளிசொன்னால் மூன்றும்பலன்வடமேற்கில்நான்காம்பலன் வடக்கில்ஐந்தாம்பலன் வடகிழக்கில்ஆறும்பலன்பூமியில் பத்தாம்பலன்ஆகாயத்தில் ஒன்பதாம்பலன் இவ்விதமாகமேற்சொன்ன பொதுவிதியில் கண்டபலன்கள் பொருந்தும்மிகுந்தஅழகுபொருந்திய வடிவத்தையுடைய தோகைமயில்போன்றசாயலையுடைய பெண்ணே. [எ-று] (௮௰)

ஞாயிற்றுக்கிழமை மாலைமுதல் திங்கட்கிழமை முழுவதும்
கூடிய நாழிகை 90-க்குபலன்.

மயிலேகதிரோன்மாலைமுதல்மதிநாள்பகலுமிரவீரா
யியலுங்கன்னல்தொண்ணூற்றிலிலங்கும்பலனேபல்லிசொலிற்

குயிலேகிழக்குஆருகுங்குறிப்பாய்தென்கீழேழதுவா
மொயிலேதெற்குஎட்டாகுமோங்குந்தென்மேலெண்ணொன்றே.

(இ-ள்) ஞாயிற்றுக்கிழமைமாலை முதல் திங்கட்கிழமைபகலும்இரவும்சேர்ந்து கூடியநாழிகை90-க்கும் கௌவுளிசொல்லில் அதின்பலன்கிழக்கில் கௌவுளிசொன்னால் ஆறும்பலன் தென்கிழக்கில்ஏழாம்பலன் தெற்கில் எட்டாம்பலன் தென்மேற்கில் முதல்பலன் பொருந்தும்பெண்ணே. [எ-று] (௮௧)

எண்ணேமேற்கதிரண்டாகஇலங்கும்வடமேலதுமூன்றுங்
கண்ணேவடக்கதீரிரண்டாங்கருதும்வடகீழைந்தாகும்
நண்ணேபுவனமொன்பானுய்நாடும்விசும்போரீரைந்தாய்ப் [ய்
பெண்ணேஇந்தமுறைப்படியேபொருந்தும்பலன்கள்கண்டறிவா

(இ-ள்) மேற்கில் கௌவுளிசொன்னால் இரண்டாம் பலன்வடமேற்கில்மூன்றும்பலன் வடக்கில்நான்காம்பலன் வடகிழக்கில் ஐந்தாம்பலன்பூமியில் ஒன்பதாம்பலன் ஆகாயத்தில் பத்தாம்பலன்இவ்விதமாக மேற்சொன்ன பொதுவிதியில்கண்ட பலன்கள்பொருந்துங்கண்டறிவாய்பெண்ணே. [எ-று] (௮௨)

செவ்வாய்க்கிழமை உதயமுதல்இரவு 50-நாழிகைவரை பலன்.

அறிவாய்செவ்வாயுதயமுதலாகுமிரவிலிருபானுந்
தெரிவாய்கன்னலைம்பதுக்குஞ்சேரும்பலன்கள்பல்லிசொல்லில்
விரிவாய்கிழக்குஐந்தாகும்விளங்குந்தென்கீழிருமூன்று
பரிவாய்தெற்குஏழாகும்பகருந்தென்மேல்பலனெட்டே

(இ-ள்) செவ்வாய்க்கிழமைஉதயமுதல் இராத்திரி20-நாழிகைவரையில்கூடியநாழிகை 50-க்கும்கௌவுளிசொன்னால் அதின்பலன் கிழக்கில்கௌவுளி சொன்னால்ஐந்தாம்பலன் தென்கிழக்கில்ஆறும்பலன்தெற்கில்ஏழாம்பலன் தென்மேற்கில்எட்டாம்பலன் இவ்விதம் பொருந்தும் பெண்ணே. [எ-று] (௮௩)

எட்டும்மேற்கில்பலனொன்றுமிலங்கும்வடமேலாமிரண்டு
கிட்டும்வடக்குமூன்றுக்கிளரும்வடகீழ்நான்கெனலாந்
தட்டும்பூமிரைந்தாய்த்தங்கும்விசும்போநவமாகுங்
கட்டுமடர்ந்தகுழலணங்கேகாணும்பலன்களிதுபாராய்.

(இ-ள்) மேற்கில்கௌவுளிசொன்னால் முதல்பலன்வடமேற்கில் இரண்டாம்பலன்வடக்கில் மூன்றும்பலன்வடகிழக்கில் நான்காம்பலன்பூமியில்பத்தாம்பலன் ஆகாயத்தில்ஒன்பதாம் பலன்இவ்விதம்மேற்சொன்னபொது விதியில்கண்டபலன்கள் பொருந்தும்மிகுந்தடர்ந்தகூந்தலையுடைய பெண்ணேபாராய். (எ-று) (௮௪)

Digitized By Roja Muthiah Research Library

செவ்வாய்இரவுவிடிய10 புதன்பகல்30ஆக நாழிகை40-க்குபலன்.

பாராய்சேயிரவி நுபான்மேற்பகரும்நாழிமுதற்புதநாள்
தேராய்மாலைவரைக்கன்னல்சேர்ந்தநாற்பான்பல்லிசொலில்
ஓராய்கிழக்குநான்காகுமுற்றதென்கிழைந்தெனலாம்
நோராய்தெற்குஆறுகங்கமூந்தென்மேலேழ்பொருந்தும்.

(இ-ள்) செவ்வாய்க்கிழமை இரவு விடிய10புதன்கிழமைமாலை வரை30-ஆக 40-நாழிகைக்கும் கெவுளிகிழக்கில் சொன்னால்நான் காம்பலன் தென்கிழக்கில் ஐந்தாம்பலன்தெற்கில் ஆறும்பலன்தெ ன்மேற்கில்ஏழாம்பலன் இவ்விதம்பொருந்தும். (எ-று) (அ௬)

பொருந்தும்மேற்கதெட்டாகட்புகலும்வடமேலொன்றதுவாந்
திருந்தும்வடக்கோரிரண்டாகத்திகழும்வடகீழொருமூன்றும்
அருந்தும்பூமிஒன்பதுவாயமரும்விண்ணேபத்தெனலாம்
எருந்துள்பிறந்தமணித்தாரையேந்துந்தடந்தோள்வல்லியரே.

(இ-ள்)மேற்கிற்கெவுளிசொன்னால் எட்டாம்பலன்வடமேற்கி ல் முதல்பலன் வடக்கில் இரண்டாம்பலன் வடகிழக்கில்மூன்றும்ப லன்பூமியில் ஒன்பதாம்பலன் ஆகாயத்தில்பத்தாம் பலன்இவ்வித பலன்பொருந்தும் முத்துமாலைதரித்த தோளுடையபெண்ணே.

புதன்இரவு30வியாழம் பகல்30இரவு20ஆகநாழிகை 80-க்குபலன்.

வல்லபுதன்றன்மாலைமுதல்வரிக்கும்பொன்னெல்விரவிருபான்
சொல்லுங்கன்னனெண்பதுக்குந்தோன்றும்பலனேபல்லிசொலில்
நல்லகிழக்குத்திசைமூன்றுய்நவிலுந்தென்கீழ்நான்காகு
மல்லவிலைதெற்கைந்தாயடுக்குந்தென்மேல்மூவிரண்டாம்.

(இ-ள்) புதன்கிழமைஇரவு30 வியாழக்கிழமைபகல்30இரவு 20ஆகநாழிகை 80-க்கும்கெவுளி கிழக்கில்சொன்னால் மூன்றும்ப லன்தென் கிழக்கில்நான்காம்பலன் தெற்கில்ஐந்தாம் பலன்தென் மேற்கில்ஆறும்பலன் இவ்விதம்பொருந்தும். (எ-று) (அஎ)

இருண்டமேற்கெண்ணேழாகயிலங்கும்வடமேலிருநான்காம்
புரண்டபலனொன்றும்வடக்குப்புல்லும்வடகீழ்பலனிரண்டாந்
திரண்டபுவனமொருபானுய்த்திகழுமென்பானுகாயம்
மருண்டமான்போன்விழிமாதேமருவும்பலன்களிதுதானே.

(இ-ள்) மேற்கில்கெவுளிசொன்னால் ஏழாம்பலன்வடமேற் ற்கில்எட்டாம்பலன் வடக்கில்முதல்பலன் வடகிழக்கில்இரண்டா ம்பலன்பூமியில்பத்தாம் பலன்ஆகாயத்தில்ஒன்பதாம் பலன்இவ் விதபலன்பொருந்தும் மருண்டமான்விழியையுடைய பெண்ணே.

Digitized By Roja Muthiah Research Library

வியாழம்விடிய10 வெள்ளிபகல் இரவு60ஆ ந நாழி70-க்குபலன்.
தானேகுருவிரவிருபான்மேற்றங்கும்நாழிமுதற்புகரோ
ஞனமாலேவரைக்கன்னலாகுமெழுபான்பல்லிசொலில்
தேனேகிழக்கதிரண்டாகுந்தென்கீழ் த்திசைமூன்றும்பலஞ
மானேதெற்குநான்கெனவேமருவுந்தென்மேலோரைந்தாம்

(இ-ள்) வியாழக்கிழமை இரவுவிடிய10 வெள்ளிக்கிழமைபக லுமிரவும்சேர்ந்து 60-ஆ ந70-நாழிகைக்கும் கெவுளிகிழக்கில்சொ ன்னால் இரண்டாம்பலன் தென்கிழக்கில்மூன்றும்பலன்தெற்கில்நா ன்காம்பலன் தென்மேற்கில் ஐந்தாம்பலன் இவ்விதம்பொருந்தும்.

ஓராய்மேற்குப்பலனிருமூன்றௌனிரும்வடமேற்பலனேழாந்
தோராய்வடக்குப்பலனெட்டுத்திகழும்வடகீழ்பலனொன்றும்
நேராய்பூமிநவமாகும்நிகழும் விண்ணேரீரைந்தாம்
பாராய்கெவுளிகாதலுக்கிபலன்கள்பொருந்தும்பெண்மயிலே.

(இ-ள்) மேற்கில் கெவுளி சொன்னால் ஆறும் பலன்வடமேற் கில்ஏழாம்பலன்வடக்கில் எட்டாம்பலன்வடகிழக்கில் முதல்பலன் பூமியில்ஒன்பதாம்பலன் ஆகாயத்தில்பத்தாம்பலன் இவ்விதபல ன்பொருந்தும்பெண்மயிலே. (எ-று) (கூ0)

மயிலேகேளாயிம்மட்டுமகிழ்ந்தேயுரைத்தநற்கெவுளி
டயிலும்பலனுஞ்சாதிநிறம்பகருந்திசையின்விதிபலவும்
வியலச்சொன்னேன்மேற்புள்ளிவீழும்பலனைமிகவிரித்துச்
செயலாயுரைப்பேன்கண்டறிவாய்திகழுங்கிள்ளைமொழிக்கிறையே

(இ-ள்) கேளாய்பெண்ணே இதுவரைநல்ல கெவுளிசொல்லு ம்பலனும்ஜாதியும் நிறமும்திசைகளின்விதியும் அதிவிரிவாகச்சொ ன்னேம் இனி பல்லிவிழும்பலனைவிரித்துச் சொல்வோம்கிளிபோ ன்றமொழியையுடைய பெண்கட்கரசியே நீகேட்பாயாக. (கூக)

(மூன்றும்பாகம் முற்றிற்று)

நான்காம் பாகம். பல்லி விழும்பலன்.

இறையேசிரசேகலகம்நநிவிலங்குமரணந்தான்கூந்த
லுரையேமிருத்துநெற்றிமணஉருவமரசர்சேர்வைவலம்
பிரையேதுக்கமிடதுநுதல்பெருந்தனமும்பெரும்வலக்கண்
சிறையேஇடக்கண்ணுசியதுசேரும்வியாதிசிற்சுபமாம்.

(இ-ள்) தலையின்பேரில்பல்லி விழுந்தால்கலகம் உச்சியில்மர ணம்கூந்தலில் மிருத்துபயம்நெற்றியில் மணக்கோலம்வலதுபுருவ த்தில்அரசர்சேர்வை இடதுபுருவத்தில் துக்கம் வலதுகண்ணில்பிர தாபம்தனம் இடது கண்ணில் சிறையுண்டாம் மூக்கில் வியாதிசற்ப வச்சொற்பசுகம் உண்டாகும். (எ-று) (கூஉ)

Digitized By Roja Muthiah Research Library

ஆமேவலதுசெவிஆயுளமருந்தெநாழிவிலிலாபமிடம்
ோமேகன்னமந்நன்றுவலம்புகல்வாயிடதுராசபயந்
தாமேவாய்க்குளதிரிபயந்நகுமேலுநடிதனநாச
மாமேகீழுக்கிலாபமுறுபுரசாணைகட்டைபெறும்.

(இ-ள்) வலதுசெவியின்பேரில் பல்லிவிழுந்தால் ஆயுள்விருத்தி இடதுசெவியில் வியாபாரலாபம்வலதுகன்னத்தில் நன்றுஇடதுகன்னத்தில்ராசபயம்வாயில்எதிரி பயம்மேலுகடில்தனநாசம்கீழுதடில் இலாபம்முகவாய்க்கட்டையில் இராசதெண்டனைஉண்டாகும்.

பெருமேகண்டம்பகைநகேடுபிடரியுறுமேதண்டிகையுந்
தருமேவலதுதோள்நஷ்டந்தங்குமிடதுபொருள்நஷ்டம்
வருமேமின்னாள்வலதுபுயம்வரிக்குமிடதுசம்போக
முருமேவலதுதனவிரயமுற்றஇடதுமுழங்கைசுகம்.

(இ-ள்) கழுத்தில்பல்லி விழில்பகைவர் நாசம்பிடரியில்தண்டிகைவலதுதோளில் நஷ்டம்இடதோளில் பொருள்நஷ்டம்வலதுபுயத்தில்பெண் வரும் இடதுபுயத்தில்ஸ்திரீ சம்போகம்வலதுமுழங்கையில்தனவிரயம் இடது முழங்கையில்சுகம் உண்டாகும் (௬௪)

சுகமாமிடதுமுன்கைக்கோசொல் வேன்வலதுபொருள்நாசம்
மிகவேபீடைவலதுமணிமிக்ககீர்த்திஇடதுமணி
அகமாங்கையின்துக்கம்வலமாகுமிடந்தேபொருள்சேரும்
சகியேபுறம்பொல்லாதுஇடம்சாற்றும்போகம்வலமுண்டாம்.

(இ-ள்) இடதுமுன்கையில் பல்லிவிழில்சுகம் வலதுமுன்கையில்பொருள்நாசம் வலதுமணிக்கட்டில் பீடைஇடது மணிக்கட்டில்கீர்த்திவலது உள்ளங்கையில் துக்கம்இடது உள்ளங்கையில் தனவரத்துஇடது புறங்கையில்கெடுதி வலதுபுறங்கையில்போகம்.

உண்டேவலதுகைவிரலுக்கூனம்வருமேஇடதுநலம்
பண்டேமார்புசுகம்நெஞ்சுபரிவாய்விரதத்துவங்கற்
கண்டேவலதுமுலேபோகங்காணும்நக்கைகெடுதிஇடம்
திண்டேர்வயிறுபுதல்வருரும்செப்பும்வியாதிமுதுகதுதான்.

(இ-ள்) வலதுகைவிரலில்பல்லி விழுந்தால்ஊனம்இடதுகைவிரலில்நன்மை மார்பில்சுகம்நெஞ்சில் விரதத்துவமுண்டாகும்வலதுமுலையில் ஸ்திரீசம்போகம் இடதுமுலையில் ஸ்திரீகெடுதிவயிற்றில் புத்திரசம்பத்து முதுகில்வியாதியுண்டாகும். (எ-று) (௬௫)

தானேஉபயபாரிசமுஞ்சம்பத்ததிகம்நாபியிணி
மானேஇடுப்புகுலவிருத்திமன்னுமரைக்குக்குலநாசம்
தேனேகுறிக்குகரிந்திரமாந்திகழும்புபுட்டஞ்சுபங்
கோனேஅரிட்டமவலதுதுடைபொருக்குஞ்சம்ப[illegible]மன்னே

(இ-ள்) விலாப்பக்கமிரண்டிலும் பல்லிவிழில் அதிகசம்பத்து தொப்புளில் நவமணிவரும் இடுப்பில் குலவிருத்தி அரையில் குலநாசம் உயிர்நிலையில் தரித்திரம்புட்டமிரண்டிலும் சுபம்வலது தொடையில்பிதா அரிட்டம் இடது தொடையில்சம்பத்துஉண்டாகும். (௬௭)

என்னேவலதுமுழந்தாளுக்கின்பமிடதுநடுக்கமுறும்
பொன்னேவலதுகெண்டைதனைப்பூணுமிடது தண்டிகையுந்
தன்னேவலதுகணைதுக்கஞ்சாற்றுமிடதுஐசுவரியம்
மின்னேஉபயபதம்பயணமீண்டுமுள்ளங்காலதுவே.

(இ-ள்) வலதுமுழங்காலில் பல்லிவிழுந்தால் இன்பம்இடதுமுழங்காலில்நடுக்கம் வலதுகெண்டைக்காலில் விலங்குவரும்இடதுகெண்டைக்காலில் தண்டிகைவரும்வலது கணைக்காலில் துக்கசமாச்சாரம் இடது கணைக்காலில் ஐசுவரியம் இரண்டுபாதத்திலும் இரண்டு உள்ளங்காலிலும் ஊர்பிரயாணம் உண்டாகும். (எ-று) (௬௮)

அதுவே உபயபுறங்காலுக்காகும்நன்மைபொருள்சேரும்
பதியேகாலின்விரலதிகபணலாபங்காலுகிரோ
நிதிபோம்பெண்ணுமாணுக்குநிகழ்த்துமிதுவேவரைபோன்றன்
சுதையேபல்லிவிழும்பலனைத்தொகுத்துச்சொன்னோமறிவையரே

(இ-ள்) இரண்டுபுறங்காலிலும்பல்லி விழில் நன்மைபொருள்வரவுஇரண்டுகால்விரலில் அதிக பணலாபம்இரண்டுகால்உகிரில் தனநாசம்இவ்வாறே ஆண்பெண்ணுக்கும்பலன் பொருந்தும் மலையாசன்மகளேஉனக்குபல்லி விழும்பலனையும்சொன்னோம். (௬௯)

அரியயனமாராலுமறியொணுப்புள்ளிநூலைப்
பிரியமாயுன்பொருட்டுப்பிரித்துமேபலகூராக
விரியவேயுரைத்தேனேவல்வீழ்பல்லிக்கூரையாய்ந்து
தெரிவையேபலனுரைத்தாற்சித்திக்குமின்னூல்மாதோ.

(இ-ள்) அரியயன் இந்திராதிதேவர்களாலும் அறியக்கூடாதஇந்நூலைஉன்பொருட்டு பிரியமாககெவ்ளிக் காதல்பலனையும் பல்லிவிழும்பலனையும் விரிவாகச்சொன்னோம் அதைஆராய்ந்து சொன்னால் இந்நூலிற்கண்டபலன் சித்திக்கும்பெண்ணே. (எ-று) (௭௦)

வாழிநான்மறைவாழிநால்வருணமும்
வாழிசோதிடநூன்முறையாய்ந்தவர்
வாழிபுள்ளிநூல்வண்மையுரைப்பவர்
ஆழிசூழுலகில்மிகவாழியே.

(முற்றிற்று)

Digitized By Roja Muthiah Research Library

திசாவிதிச்சக்கரம்.

வடகிழக்கு		கிழக்கு		தென்கிழக்கு
	ஈசானன்	இந்திரன்	அக்கினி	
வடக்கு	குபேரன்	1	எமன்	தெற்கு
	வாயுவு	வருணன்	நிருதி	
வடமேற்கு		மேற்கு		தென்மேற்கு

சனிக்கிழமைகாலை உதயக்கோள்.

கேது	சூரியன்	சந்திரன்
சனி	2	செவ்வாய்
சுக்கிரன்	குரு	புதன்

சனிக்கிழமைமாலை உதயக்கோள்.

சுக்கிரன்	சனி	கேது
குரு	3	சூரியன்
புதன்	செவ்வாய்	சந்திரன்

ஞாயிறு இரவு உதயக்கோள்.

குரு	சுக்கிரன்	சனி
புதன்	4	கேது
செவ்வாய்	சந்திரன்	சூரியன்

செவ்வாய் காலை உதயக்கோள்.

சுக்கிரன்	குரு	[illegible]ன்
சனி	5	செவ்வாய்
கேது	சூரியன்	சந்திரன்

செவ்வாய் இரவு21 ம்நாழிகை உதயக்.

சனி	சுக்கிரன்	குரு
கேது	6	புதன்
சூரியன்	சந்திரன்	செவ்வாய்

புதன் இரவு உதயக் கோள்.

கேது	சனி	சுக்கிரன்
சூரியன்	7	குரு
சந்திரன்	செவ்வாய்	புதன்

வியாழம் இரவு21-ம்நாழிகை உதயக்.

சூரியன்	கேது	சனி
சந்திரன்	8	சுக்கிரன்
செவ்வாய்	புதன்	குரு

ஆட்டு அல்லக்கு திணக்கசரம்.

கேது	சூரியன்	செவ்வாய்
சந்திரன்	9	குரு
சனி	சுக்கிரன்	புதன்

Digitized By Roja Muthiah Research Library

உ

சிவமயம்.

S. P. மாசிலாமணியா பிள்ளை, ஜீவானந்த ஹம்ஸா சித்த வைத்தியசாலை, வசந்தநகர்.

விளம்பரம்.

இதனால் சகலமான பேர்களுக்கும் அறிவிப்பதாயிருப்பதென்னவெனில் இதனடியில் கையொப்பமிட்டிருக்கிற நம்மால் ஈரோடு சகலகலாநிலைய அச்சுக்கூடத்தில் பதிப்பித்து வெளியாக்கிய இக்கெளளிசாஸ்திரத்தை மகாகனம் பொருந்திய கவர்னர்மெண்டாரவர்களின் 1867-வருஷத்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவில் 6-வது [illegible] யின்படி நம்மபேரால் ஆல்ரயிட்ஸ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற படியால் இந்தப்புஸ்தகத்தை நம்முடையஎழுத்து மூலமான அனுமதியன்றியில் யாதொரு அச்சுக்கூடத்தலைவர்களும் ஏனையோர்களும் எவ்விதத்திலும் அச்சிட்டுவிற்பனை செய்யக்கூடாது. அவ்விதம் அச்சிட்டு விற்பனை செய்வார்களாயின் மேற்படி ஆக்டில் சொல்லியிருக்கிறபடி கோர்ட்டார்மூலமாய் விதிக்கப்படும் சகலதண்டனைகளுக்கும் அதனால் நமக்கு உண்டாகும் சகல நஷ்டத்திற்கும் உள்ளாவார்களென்று இதன்மூலமாய் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

*மேலும் இப்புஸ்தகம் தேவையானவர்கள் நம்மிடத்திலும் ஈரோடு புஸ்தகவியாபாரம் ம-ா-ா-ஸ்ரீ இ. முருகேசமுதலியாரவர்களிடத்திலும் திருச்சிராப்பள்ளி புஸ்தகவியாபாரம் மகா-ா-ா-ஸ்ரீ ஆ. சந்திரசேகர முதலியாரவர்களிடத்திலும் தாராபுரம் புஸ்தகவியாபாரம் மகா-ா-ா-ஸ்ரீ அ. முத்துசாமிநாயுடு அவர்களிடத்திலும் கோயமுத்தூர் புஸ்தகவியாபாரம் ம-ா-ா-ஸ்ரீ இ. [illegible] அவர்களிடத்திலும் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

இனியும் நூதனமாய் இதுவரைஅச்சிட்டிராத [illegible] முதலிய பலவிதபுஸ்தகங்கள் அச்சிற்பதிப்பிக்க முயற்சித்து வருகிறது கூடியசீக்கிரம் அச்சிட்டு வெளிப்படுத்தப்படும்.

இங்ஙனம்,

வே. இராமலிங்க முதலியார்.

கண்டிராக்டர்,

ஈரோடு.

S. P. மாசிலாமணியா பிள்ளை,
ஜீவானந்த
ஹம்ஸா சித்த வைத்தியசாலை,
வசந்தநகர்.

Best copy available

Digitized By Roja Muthiah Research Library